# அஸ்-ஸுலூக் - As-Sulook

*உருதுவில்:* **அல்-குத்பு அஷ்ஷாஹ் முஹம்மது அப்துல் காதிர் ஸூபி ஹைதராபாதி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்.** *In Urdu:* **Al-Quthb As-Sah Muhammad Abdul Quadir Sufi Hyderabai Radiallahu Anhu.**

*தமிழில்:* **அஷ்-ஷாஹ் ஷெய்கு அப்துல் காதிர் ஆலிம் ஸூபி காஹிரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்.** *In Tamil:* **As-Sah Shaikh Abdul Quadir Alim Sufi Hazrath Kahiree Radiallahu Anhu**

## மூல நூலாசிரியப் பெரியார் அவர்களின்

## முன்னுரை.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.

ஹக்குத் தஆலாவின் பேரில் தேட்டமுடைய தாலிபீன்கள் தினமும் படித்துப் பார்த்து அதன்படி இறைவழி நடந்து தங்களில் மறைந்து கிடக்கும் கமாலாத்து வல்லமைகளை-சம்பூரணத்துவங்களை-அபிவிருத்தி செய்து கொள்ள அவர்களுக்கு உதவியா அமைந்திடுவதற்காக, இறைவழி (ஸுலூக்) நடைமுறைகளை நல்ல விபரமாகவும், தெளளத் தெளிவாகவும் விளக்கி ஒரு சிறிய நூலை எழுத வேண்டும் என்ற ஆவல் நெடுங்காலமாக என் மனதிலிருந்தது. அதற்கு சமயம் வாய்க்காதிருந்தது.

எப்பொழுது நான் ரங்கூன் வந்து ஆரிபுபில்லாஹ் மௌலவி முஹம்மது ஜான் சாஹிபு அவர்களைச் சந்தித்தேனோ அப்பொழுது முதல் அவர்களது அன்பின் எழுச்சி என் மனதில் அந்த எண்ணத்தை அதிகரிக்கச் செய்து விட்டது. என்னிருதயத்திலும், புத்தியிலும் அல்லாஹ்வின் புறத்தினால் அந்தக் கருத்துக்கள் நிறைந்து ததும்பின. அப்பொழுதே, இந்நூலை துவக்கம் செய்துவிட்டேன்.

ஷெய்குமார்களின் எந்தக் கிரந்தங்களிலிருந்தும் உதவி பெறாமல், அல்லாஹ்வின் வரிசையினால் இன்று ஹிஜ்ரி 1349 ஷவ்வால் 13ல் இந்த நூலை பூர்த்தியுறச் செய்தேன். இதற்கு **'அஸ்ஸுலூக்கு-இறைவழி நடை'** எனப் பெயர் வைத்தேன். இப்பொழுது மௌலவி முஹம்மது ஜான் சாகிபு அவர்களை ஷாஹ் முஹம்மது ஜான் ஸூபி பாகிபில்லாஹ் என்ற பெயரைக் கொண்டு அழைக்கிறேன். மேலும் இந்நூலை படித்துக் கொடுக்கவும் இதன்படி மக்களை ஞான வழிப்பாட்டில் தர்பியத்து (ஒழுக்கப் பண்பாடு) செய்யவும், இறைவழி நடத்தாட்டவும், 'தரீகா' அலிய்யா காதிரிய்யா, 'நக்ஷபந்தியா ஊலா', தானியா'-அதாவது முஜத்திதிய்யா, 'அபுல் உலாயிய்யா ஜிஷ்திய்யா- பிரகாரம் ஹக்கைத் தேடுகிற தாலிபீன்களுக்கு இந்நூலில் குறிப்பிட்டபடி திக்ரு, ஷுக்லு, முறாக்கபா முதலியவற்றை கற்றுக் கொடுக்கவும், எனக்கு என்னுடைய குருநாதர் ஷெய்கு குத்புல் அக்தாபு பர்துல் அப்ராது, ஸுல்தானுல் மஜாதீபு, ஹளரத் ஸெய்யிது ஷாஹ் இஸ்மாயில் ஸூபி (குத்திஸ ஸிர்ரஹு) அவர்கள்

இஜாஸா-அனுமதி தந்ததுபோல, நான் (ஷாஹ் முஹம்மது ஜான் ஸூபி பாகிபில்லாஹ்) அவர்களுக்கு இஜாஸா அளிக்கிறேன். துஆ கேட்கிறேன்.

அல்லாஹுத் தஆலா அவர்களுக்கும், எனக்கும், அவர்களது பிள்ளைக் குட்டி பிச்சளங்களுக்கும், அன்பர்களுக்கும், என் பிள்ளைக்குட்டி பிச்சளங்களுக்கும், அன்பர்களுக்கும், இந்த தரீகில் சேர்ந்த தாலிபீன்களுக்கும் அவனுடைய கிருபை, உபகாரம்,அன்பு, அருளைக் கொண்டு எக்காலத்தும் அழகான, ஒளிமயமான, ஷரீஅத்தின் பேரில் தரிபடுத்தி வைப்பானாக. எல்லா nஷய்குமார்களுடைய பைளு, பரக்கத்து ஒளிகளைக் கொண்டு தம்முடைய அகத்தையும், புத்தியையும், ஆன்மாவையும்(கல்பையும், அக்லையும், ரூஹையும்) மற்றும் சகல லதீபாக்களையும் பிரகாசமாக்கி வைப்பானாக. மேலும் நாயனே! எங்களை எங்கள் தீனிலும் துன்யாவிலும், யாரளவிலும் தேவையானவர்களாக ஆக்காதிருப்பாயாக! எங்கள் அனைவர்களுடைய முடிவையும் அழகான முத்திராங்க முடிவாய் ஆக்கி வைப்பாயாக! உன்னுடைய ஹபீபு அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொருட்டால் இவற்றை கபூல் செய்வானானக.

ஸலவாத்தும், ஸலாமும் அவர்கள் பேரிலும் அவர்களது கிளைஞர்கள், தோழர்கள், அனைவர்கள் பேரிலும் உண்டாவதாக. ஆமின். யாறப்பல் ஆலமீன்.

எங்களது பிரார்த்தனையின் கடைசியாகிறது (அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்) அகில உலகத்தார்களின் போஷகனான அல்லாஹ்வுக்கே சகல புகழும் உரியன என்பதாகும்.

**அஸ்ஸுலூக்- இறைவழி நடை**

**ஆறு வகை (தனஸ்ஸுலாத்) இறக்கங்கள் பற்றிய சுருக்கமான விளக்கம்**

**மர்த்தபா அஹதிய்யத்து அல்லது தாத்துல் முத்லக்கு**

இந்த மர்தபா (படித்தரம்) சகல கட்டுப்பாடுகளையும் விட்டு பரிசுத்தமானதாகும். இதில் எந்த (ஸூரத்தின்) கோலத்தின் பேரிலும் வெளியாவதற்கு இஸ்த்திஃதாது, காபிலியத்து- அருகதை, ஏற்புத் தன்மை இல்லை. உதாரணமாக மெழுகின் எண்ணெய்யைப் போல. அது எந்த ஸூரத்திலும்-உருவத்திலும் வெளியாவதற்கு இலாயக்காக இல்லை.

**முதலாவது இறக்கம்: மர்த்தபத்து வஹ்தத்து அல்லது ஹகீகத்து முஹம்மதிய்யா.**

இந்த மர்தபாவுக்கு 'தஜல்லி அவ்வல்'-முதல் தோற்றம் என்றும் சொல்வார்கள். ஒரு மர்தபாவிலிருந்து வேறொரு மர்த்தபாவுக்கு வருவதற்கு தஜல்லி, தனஸ்ஸுல், தோற்றம், இறக்கம், எனப்படும். எப்படிப் போலெனில், பால் தனது முதல் மர்தபா-அதாவது பாலாக இருக்கும் தன்மையிலிருந்து தயிரின் மர்தபாவுக்கு வந்ததேயானால் தயிராக ஆகுமானால்- அல்லது மெழுகுபத்தியின் எண்ணெய்யானது அது உறைந்து மெழுகாக ஆகுமானால்-அப்போது பால் தயிரின் ஸூரத்தில் தோன்றினது அல்லது இறங்கினது அல்லது வெளியானது என்றும்

அதேபோல் மெழுகுவத்தியின் எண்ணெய் உறைந்து மெழுகின் ஸூரத்தில் தோன்றினது அல்லது இறங்கினது அல்லது வெளியானது என்றும் சொல்வோம்.

ஹக்குத்தஆலா எப்பொழுது அஹதிய்யத்தின் மர்தபாவிலிருந்து முதலாம் மர்தபாவுக்கு வெளியானானோ அந்த மர்தபாவுக்குப் பெயர் வஹ்தத்தின் மர்தபா, ஹகீகத்துல் முஹம்மதிய்யா அல்லது தஜல்லி அவ்வல்-முதல் தோற்றம் அல்லது தனஸ்ஸுல் அவ்வல்-முதல் இறக்கம் என்று வைக்கப்பட்டது. இந்த மர்தபாவில் ஹக்குத்தஆலா மும்கின் உடைய-சிருஷ்டி உடைய –சகல ஸூரத்திலும் வெளியாவதற்கு இஸ்தி:ஃதாதையும், காபிலியத்தையும்-அருகதையையும், ஏற்புத் தன்மையையும் தன்னில் பெற்றுக் கொண்டான். இன்னும் நான் சகல சிருஷ;டிகளின் ஸூரத்துக்களிலும் வெளியாக முடியும் என்று அறிந்து கொண்டான். இந்த அறிவுக்கு 'இல்மு இஜ்மாலி-பொதுவான அறிவு எனப்படும். இந்த வஹ்தத்தின் மர்தபாவுக்கு இல்மு இஜ்மாலியின் மர்தபா என்றும் சொல்வார்கள். ஆனால், இந்த மர்தபாவில் இல்மு மஃலூமு, ஆலிமு-அறிவு, அறியப்பட்டது, அறிந்தவன்-இம்மூன்றும் பரிசுத்தமான அந்த தாத்து ஒன்றேயாகும். இங்கு அறவே வேற்றுமையும், துவிதமும் இல்லை. தாத்துதானே ஆலிம், மஃலூம், இல்முவாகும், அறிந்ததாகவும், அறியப்பட்டதாகவும், அறிவாகவும் ஆகும்.

இந்த மர்தபாவில் ஹக்குத்தஆலா தன் தாத்தை அறிந்ததோடு தான் சகல ஸூரத்தின் பேரிலும் வெளியாவதற்கு அருகதையானவனாக இருக்கிறதையும் பொதுவாக அறிந்து கொண்டான். ஸூரத்துக்களின் பேரில் வெளியாகிற அறிவுமட்டும் உண்டானது. விபரமான அறிவு அதாவது இன்ன இன்ன ஸூரத்தில் வெளியாக இயலும் என்ற அறிவு உண்டாகவில்லை எப்படியென்றால் மெழுகானது சகல ஸூரத்திலும் வெளியாக சக்தி உடையதாக இருப்பதைப் போல்.

**இரண்டாவது இறக்கம்: மர்தபத்து வாஹிதிய்யத்து**

பின்னர், ஹக்குத்தஆலா, விபரமான அறிவுக்காக இரண்டாவதாக தோன்றினான். இந்த தோற்றத்திற்குப் பெயர் வாஹிதிய்யத்து, ஸூரத்துல் முஹம்மதிய்யா, தஜல்லி தானி, ஹகீகத்துல் இன்ஸானியாவாகும். இந்த மர்தபாவில் ஹக்குத்தஆலா ஆதியிலிருந்து அந்தம் வரையிலும் எவ்வளவு ஸூரத்துக்களின் பேரில் அவன் தோன்றமுடியுமோ அத்தனையையும் விபரமாக அறிந்தான். இந்த மர்தபாவில் ஒவ்வொரு ஸூரத்தும் மற்ற ஸூரத்தை விட்டும் அலாதியாக வெளியாகிவிட்டது. ஆனால், வஹ்தத்துடைய மர்தபாவில் ஒவ்வொரு ஸூரத்தும் மற்ற ஸூரத்து தானாகவும், இன்னும் ஹக்குத்தஆலாவின் தாத்து தானாகவும் இருந்தது. ஒரு ஸூரத்தாவது மற்ற ஸூரத்தை விட்டும் அலாதியானதாகவும் பிரிந்ததாகவும் இல்லை. மனிதன், மிருகம், பூமி, வானம் எல்லாம் வஹ்தத்துடைய மர்தபாவில் ஒன்று மற்றதுதானாகவே இருந்தது. இதேபோல், ஹக்குத்தஆலாவின் தாத்து தானாகவும் இருந்தது. எப்படியெனில் மெழுகுக்குள் மனிதனுடைய ஸூரத்தும், இன்னும் மிருகத்துடைய ஸூரத்தும் ஒன்று மற்றதைவிட்டும் அலாதியாக பிரியவில்லை என்கிலும், ஒன்று மற்றது தானாக இருக்கிறது. இன்னமும், இதேபோல இரண்டு ஸூரத்துக்களும் மெழுகுதானாகவுமிருக்கிறது. அதாவது, மிருகத்தின் ஸூரத்தும், இன்னும் மனிதனின் ஸூரத்தும் இன்னும் மெழுகின் தாத்தும்

ஒன்றாகவே இருக்கிறது. எந்தவொரு ஸூரத்தும் எதையும் விட்டுப் பிரியவில்லை. மெழுகும் அவைகளை விட்டுப் பிரியவில்லை. யாவுமே ஒன்று மற்றது தானாக இருக்கிறதைப்போல். ஆனால் வாஹிதிய்யத்துடைய மர்தபாவில் ஒவ்வொரு ஸூரத்தும் மற்ற ஸூரத்தை விட்டும் பிரிந்ததாய் ஆகிவிட்டது. பூமியின் ஸூரத்து வானத்தின் ஸூரத்தை விட்டும், மனிதனுடைய ஸூரத்து மிருகத்தின் ஸூரத்தை விட்டும் பிரிந்து பிரிந்து அறியப்பட்டதாய் ஆகிவிட்டது. இந்த மர்தபாவில் ஒவ்வொரு வஸ்துவும் ஒவ்வொரு வஸ்துவை விட்டும் பிரிந்ததாய் ஆகிவிட்டது.

ஆதியிலிருந்து அந்தம் வரை எத்தனை ஸூரத்துகள் உண்டாகுமோ அத்தனையும் ஹக்குத்தஆலா இந்த மர்தபாவில் வெள;வேறாக அவைகளின் நிலைமைகள், விதங்கள், இன்னும் உசும்புதல், ஒடுங்குதல்களையும் ஒரே கணத்தில் தெரிந்து கொண்டான். எப்படியென்றால் கற்பனை செய்து பாருங்கள்! அதாவது மெழுகானது எந்த ஸூரத்தின் பேரிலும் வெளியாவதற்கு முன்னால் தனக்குள்ளால் எல்லா ஸூரத்துகளிலும் தன்னைப் பெற்றுக் கொண்டதைப் போல்.

இந்த மர்தபாவில் ஹக்குத்தஆலா வெள;வேறாக அறிந்திருந்த ஸூத்துக்களை எல்லாம் கௌனிய்யான அஸ்மாக்கள் என்றும் சொல்வார்கள். அதாவது ஒவ்வொரு ஸூரத்தும் இஸ்மாகும். எப்படியென்றால் இன்ஸான் என்ற ஸூரத்து இஸ்மாகம். இதேபோல் ஹயவான் என்ற ஸூரத்தும் இஸ்மாகும். ஆனால், இந்த இஸ்முக்கு இஸ்மு கௌனிய்யா என்று சொல்வார்கள். இதேபோல் இந்த மற்தபாவில் ஹக்கு ஸுபுஹான ஹுவதஆலாவின் ஹயாத்து, இல்மு, இறாதத்து, குத்றத்து, ஸம்உ, பஸறு, கலாம் - சீவன், அறிவு, நாட்டம், தத்துவம், கேள்வி, பார்வை, பேச்சுக்களான அறியப்பட்டவைகளான சூறத்துகளாகிறது அவைகளுக்கு அஸ்மாவு இலாஹிய்யா-இலாஹிய்யத்தான அஸ்மாக்கள் என்று சொல்வார்கள்.

உதாரணமாக பூமி, வானம், இன்ஸான், ஹயவான் மற்றும் உலகிலுள்ள சகல அணுக்களின் ஸூத்துக்களையும் 'அஸ்மாஉகியானி' என்று சொல்லப்ப:டும். இன்னும் ஒவ்வொரு ச10றத்தும் ஒரு இஸ்மாகும். கௌனிய்யாவான வானத்தின் சூறத்தாகிறது ஒரு 'இஸ்மு கௌனி' ஆகும். என்கிலும் இந்த 'இஸ்மு கௌனி'யாகிறது முஸம்மா-அதாவது ஹக்குத்தஆலாவின் தாத்து தானாகவே இருக்கும். இதேபோல் ஹயாத்து, இல்மு, மற்றவைகளின் ஒவ்வொரு ஸூரத்திற்கும் 'இஸ்மு இலாஹி' என்று சொல்லப்படும். மேலும் ஒவ்வொரு ஸூரத்தும் தாத்து தானாகவே இருப்பதனால் ஒவ்வொரு இஸ்மும் முஸம்மா தானாகவே அதாவது ஹக்குத் தஆலாவின் தாத்து தானாகவே ஆகும்.

இன்னும் 'இஸ்மு லப்ளி'-மொழித்தலிலான இஸ்மாகிய ஹயாத்து, இல்மு, குத்றத்து, இறாதத்து மற்றவைகளானவை இஸ்முடைய இஸ்மாக இருக்கும். அதாவது ஹயாத்து என்ற மொழிதலில் வரக்கூடிய இஸ்முடைய முஸம்மாவாகிறது அல்லாஹ்வின் அறிவில் வெளியாகியிருக்கிற ஹயாத்து என்ற ஸூரத்தாக இருக்கும். இதேபோல் வானம் என்பது அல்லாஹ்வின் அறிவில் வெளியாகி இருக்கிற வானம் எனும் ஸூரத்திற்கு இஸ்மாக இருக்கும். இது 'இஸ்முலப்ளி' மொழித்தலிலான இஸ்முவாகும். இன்னும் இஸ்முடைய இஸ்மாகும். இந்த 'இஸ்முலப்ளி'யாகிறது ஹகீகிய்யான இஸ்முக்கு-அல்லாஹ்வின் அறிவில்

வெளியாகி இருக்கிற இஸ்முக்கு வேறானதாகும். அதுவல்லாததாகும். இதேபோல், எப்பொழுது ஹக்குத்தஆலா இந்த வாஹிதிய்யத்தின் மர்தபாவில் ஹயாத்து, இல்மு, குத்றத்து, இறாதத்து, ஸம்உ, பஸறு, கலாம் இந்த ஏழு ஸூரத்துக்களையும் சேர்த்து ஒரு குறிப்பான சூறத்தில் தன்னைப் பார்த்தானோ இந்த ஏழு ஸிபத்துக்களும் சேர்ந்த ஸூரத்திற்கு 'இஸ்முஉலூஹிய்யத்து'-'தெய்வீக இஸ்மு' என்று பெயர் சொல்லப்படுகிறது. இந்த உல}ஹிய்யத்துடைய இஸ்முக்கு இஸ்முலப்ளி-மொழித்தலிலான இஸ்மாகிறது 'அல்லாஹ்' என்பதாகும். எனவே 'அல்லாஹ்' என்பது உலூஹிய்யத்துடைய சூறத்திற்கு 'இஸ்முலப்ளி'யாகும.; உலூஹிய்யத்துடைய சூறத்து இஸ்முஹகீகிய்யாகும். அது முஸம்மாதானாகும். அதாவது ஹக்குத்தஆலாவின் தாத்து தானாகும். ஆகவே **'அல்லாஹ்'** என்ற இஸ்முலப்ளியாகிறது முஸம்மாவுக்கு வேறானதாகும்.

இன்னும் ஏழு ஸிபத்துக்களும் சேர்ந்த ஸூரத்தாகிய 'உலூஹிய்யத்துடைய ஸூரத்து' ஆகிறது ஹக்குதஆலாவின் தாத்துதானாக இருக்கும். இன்னும் இந்த 'உலூஹிய்யத்துடைய சூறத்து'தான் 'ஹகீகத்து இன்ஸான்' ஆக இருக்கும். இன்னும் இன்ஸான் இந்த ஏழு சிபத்துக்களையும் சேர்த்துக் கொண்டவனாக இருப்பதனால்தான் 'இன்ஸான் அல்லாஹ்வின் சூறத்தில் படைக்கப்பட்டிருக்கிறான். இவருக்குத்தான் 'இன்ஸான் காமில்' 'சூறத்து முஹம்மதீ' என்று சொல்கிறார்கள்.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீமில் 'இஸ்மு' என்பதைக் கொண்டு கருத்தாகிறது இந்த இன்ஸான் காமிலேயாகும். அதாவது, உலூஹிய்யத்துடைய மர்தபாவாகும். அதன் பொருளாகிறது: 'நான் அல்லாஹ் எனும் நாமத்தைக் கொண்டு, அதாவது இன்ஸான் காமிலுடைய ஹகீகத்தைக் கொண்டு உதவி தேடுகிறேன்' என்பதாகும். ஏனென்றால், இந்த சிபத்துக்களைக் கொண்டுதான் ஹக்குத்தஆலா (சிருஷ்டிகளுக்கு) தேவைகளை நிறைவேற்றக் கூடியவனாக இருக்கிறான். இந்த சிபத்துக்களில் ஒரு சிபத்தையாவது நீக்கிவிடுவீர்களேயானால், ஹக்குத்தஆலாவின் தாத்து, 'தேவைகளை நிறைவேற்றக் கூடியதாக' ஆக முடியாது. உவமையில், தேவையை நிறைவேற்றி வைப்பதற்கு ஹயாத்து-சீவன் அவசியம் வேண்டும். ஏன்? சீவுனில்லாதவன் தேவையை நிறைவேற்ற மாட்டான். சீவன் மட்டும் தேவையை நிறைவேற்றி வைப்பதற்குப் போதுமானதாக ஆகாது. அறிவும் அவசியம் வேண்டும். ஏன்? தேவைகளின் வகைகளை அறிந்து கொள்ளவில்லையானால் எப்படி தேவைகளை நிறைவேற்றுவான்?

அறிவிற்குப் பின் தத்துவமும் இருப்பது அவசியம் ஆகும். தத்துவமில்லையானால், அறிவும் சீவனும் இருந்தாலுங்கூட தேவையை நிறைவேற்றுவது பூரணமாகாது. பின்னர் சீவனுமிருக்கிறது, அறிவுமிருக்கிறது, தத்துவமுமிருக்கிறது, நாட்டமில்லையானால் எங்ஙனம் தேவையை நிறைவேற்ற முடியும்? பின்னர், சீவனுமிருந்தது. அறிவுமிருந்தது, தத்துவமிருந்தது. நாட்டமிருந்தது, ஆனால் தேவையானவர்களுடைய தேவைகளையும், அவர்களின் கோரிக்கைகளையும் கேட்க முடியவில்லையானால், தேவையை நிறைவேற்றுவது எப்படி முடியும்? இதனாலேயே கேள்வியும் அவசியமாகிவிட்டது. பின்னர் சீவன், அறிவு, தத்துவம்,

நாட்டம், கேள்வி, இவைகள் இருக்கிறதுடன் பார்வையும் அவசியம் வேண்டும். ஏன் தேவையின் அளவைத் தெரிவதற்காக. தெரியவில்லையானால் தேவை எப்படி பூரணமாகும்?

பின்னர் சீவன், அறிவு, தத்துவம், நாட்டம், கேள்வி, பார்வையுடன் பேச்சும் அவசியம் வேண்டும். ஏன்? பேச்சில்லாமல் கொடை சாத்தியமாகாது. கொடை கொடுக்கும்படி கட்டளையிடுவதாகிறது, பேச்சில்லாமல் உண்டாகாது. ஆகவே இந்த விளக்கத்தினால் இந்த ஏழு ஸிபத்துகளும் இல்லாமல் ஹக்குத்தஆலா அடியார்களுடைய தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்கில்லை என்பது விளக்கமாகிவிட்டது. எப்பொழுது இந்த ஏழு சிபத்துக்களின் அறிவு உண்டாகிவிட்டதோ அப்போது ஹக்குதஆலாவின் தாத்து தன்னை இலாஹுவாகவும், அதாவது தேவைகளை நிறைவேற்றுகிறவன் ஆகவும் அடியானை மஃலூஹு-தேவைகளை உடையவனாகவும் பெற்றுக் கொண்டான். இந்த ஏழு சிபத்துக்களும் சேர்ந்து 'அல்லாஹ்வின் சூறத்'தாக ஆனது. இந்த சூறத்தின் பேரிலேயே அல்லாஹுத்தஆலா இன்ஸானைப் படைத்தான். ஆகவே இன்ஸான் காமிலாகிறவர், இந்த ஏழு சிபத்துக்களும் சேர்ந்திருப்பதனால், முஸம்மாதானாகிய அதாவது ஹக்குடைய தாத்துதானாகிய ஹக்குடைய தாத்தின் இஸ்மாக ஆனார்.

இன்னும் சகல உலகத்திற்குத் தேவைகளை நிறைவேற்றி கொடுப்பதற்கு வஸீலா காரணமானவராக வெளியில் வந்துதித்தார். இன்ஸான் காமிலின் பொருட்டினாலல்லாமல் உலகத்தில் யாருடைய தேவையும் நிறைவேற முடியாது. இதனாலேயே அல்லாஹுதஆலா 'எந்தக் காரியத்திலும் அல்லாஹ், ரஹ்மான், ரஹீம் என்ற இஸ்மைக் கொண்டே உதவி தேடுவீர்களானால் நாட்டம், தேவை நிறைவேறிவிடும் என்று அடியார்களுக்கு கற்றுக் கொடுத்தான். ஏனென்றால், எதார்த்தத்தில் அந்த 'அல்லாஹ்' எனும் இஸ்மானது வெளி உலகில் 'சூறத்து முஹம்மதிய்யா'வாகயிருக்கும். ஒவ்வொரு கணமும் அல்லாஹ்தஆலா கற்பித்து தந்ததை பின்பற்றி ஒவ்வொரு அடியானும் சகல வேலைகளிலும் சூறத்து முஹம்மதிய்யாவை வஸீலாவாக ஆக்கி கொள்வது, தன்னுடைய தேவைகளை பரிபூரணமாக நிறைவேற்றிக் கொள்வதாகும். இதுவேதான் 'பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர்ரஹீம்' உடைய பொருளாகும்.

**மூன்றாவது இறக்கம்:- மர்தபதுல் அர்வாஹ்**

இதற்குப் பின்னால் அவசியம் அறிய வேண்டும். அதாவது வாஹிதிய்யத்துடைய மர்தபாவில்-விபரமான அறிவில் ஹக்குத்தஆலாவின் தாhத்தானது, ஒவ்வொரு சூறத்தையும் மற்ற சூரத்தையும் விட்டு வேறாக, அலாதியாக அறிந்தது. ஆனால், எந்த சூறத்திற்கும் தன்னைப் பற்றிய அறிவும், வேறெந்த சூறத்தைப் பற்றிய அறிவும், ஹக்குத் தஆலாவின் தாத்தைப் பற்றிய அறிவும் இல்லாதிருந்ததினால் பின்னர் ஹக்குத்தஆலா, கியானிய்யான அஸ்மாக்கள் என்று அல்லது அஃயானு தாபித்தா என்று சொல்கிறார்களே அந்த சூறத்துக்களின் பேரில் இல்மைக் கொண்டு, அறிவைக் கொண்டு தஜல்லியானான்.-அதாவது அந்த ஸூரத்துகளுக்கு அறிவைக் கொடுத்தான். அதனால் ஒவ்வொரு ஸூரத்தும் தன்னையம் அறிந்தது. அதாவது நான் வானமாகும், நான் பூமியாகும், நான் மனிதனாகுமு;, நான் மிருகமாகும் என்று அறிந்தது. இந்நும் மற்றதையும் அறிந்தது. அதாவது உவமையில் மனிதன் தன்னையும் அறிந்து பின்னர் வானத்தையும் அறிந்தான். பூமியையும் அறிந்தான். மிருகத்தையும் அறிந்தான். இன்னும்

தன்னைப் படைத்த எஜமானான ஹக்குத் தஆலாவின் தாத்தையும் அறிந்தான். இந்த தஜல்லி – தோற்றத்திற்கு தஜல்லி தாலிது-மூன்றாம் தோற்றம் அல்லது அர்வாஹுடைய மர்தபா என்று சொல்வார்கள். இன்னும் இந்த மர்தபாவுக்கு மர்தபது கரிஜுல் வுஜூது-மர்தபதுல் ஹல்கு-உஜூதின் வெளியான மர்தபா, சிருஷ்டியின் மர்தபா என்றும் நம்புகிறார்கள். முந்திய இரண்டு மர்தபாவுக்கும் அதாவது இல்ம இஜ்மாலீ உடைய மர்தபாவுக்கும் அல்லது வஹ்தத்துக்கும் இன்னும் இல்ம தப்ஸீலி உடைய மர்தபாவுக்கும் அல்லது வாஹிதிய்யத்திற்கும் 'மறாத்திபு தாகிலுல் உஜூது- உஜூதின் உள்ளான மற்தபாக்கள்' என்று சொல்வார்கள்.

இன்னும் இந்த மூன்றாவது மர்தபா அதாவது அர்வாஹுடைய மர்தபாவுக்கு மற்தபது காரிஜுல் உஜூதின் வெளியான மர்தபாவென்றும் அறிகிறார்கள். இன்னும் மர்தபா இல்முத்தப்ஸீலியுள்ள அதாவது வாஹிதிய்யத்திலுள்ள அறியப்பட்ட சகல சூரத்துக்களையும் மக்லூக்கு-சிருஷ்டி என்றும் நம்பமாட்டார்கள். கைறு மக்லூக்கு- சிருஷ்டியல்ல என்றும் நம்ப மாட்டார்கள். ஆனால், அர்வாஹுடைய மர்தபாவில் அதே சூரத்துக்களை மக்லூக்கு சிருஷ்டி என்றும் சொல்வார்கள்.

இந்த மூன்றாம் மர்தபாவில் இருந்து கல்கு, மக்லூக்கு காலிகு-சிருஷ்டித்தல், சிருஷ;டி, சிருஷ;டிகர்த்தா என்று வெளியானது. இதற்கு முந்தினதில் இல்மு, மஃலூம், ஆலிம்-அறிவு, அறியப்பட்டது, அறிந்தவன் என்று நம்பப்படுகிறது. சூரத்துக்கள் அதுவேதான். ஆனால் தன்னை உணர்ந்ததனாலும் மற்றவைகளை உணர்ந்ததனாலும் 'மக்லூகிய்யத்து'-சிருஷ்டிக்கப்பட்டவையாக ஆகிறதின் கட்டளைகள் அதன்பேரில் உண்டானது. இங்கு கற்றுக் கொடுக்க வேண்டியது ஒரு நுட்பம் விபரிக்கத் தகுந்ததாய் இருக்கிறது. ஆதை சாலிக்கு இறைவழி நடப்பவன் தெரிந்து கொள்வது இறைவழி நடப்பதற்கு அவசியம் ஆகும். அதுவாகிறது அவன் சிருஷ்டி என்ற பெயரை தன்னை உணர்ந்ததனால் மட்டுமே பெற்றான்.

எதுவரையிலும் மனிதன் தன்னை நான் மனிதன் என்று உணர்கிறானோ அதுவரையிலும் தான் அவன் மக்லூக்காகும், அடிமையாகும். அடிமைத்தனத்தின் கட்டளைகளினால் கட்டுண்டவானாகும். ஏப்பொழுது மனிதன் தன்னை மறந்தானோ அப்போது சிருஷ்டியாய் இருப்பதற்குரிய கட்டளைகள் எடுபட்டுப் போய்விட்டது. இப்போது இவன் மக்லூக்காக - சிருஷ்டியாக இருக்கிற மர்தபாவை விட்டும் கைற மக்லூக்-சிருஷ;டியல்லாதவனாக இருக்கிற மர்தபாவில் சென்று விடுகிறான். அதாவது, அர்வாஹுடைய மர்தபாவை விட்டும் வாஹிதிய்யத் அல்லது அஃயானு தாபித்தா உடைய மர்தபாவில் சென்று விடுகிறான். மனிதன் தன்னை உணர்வது மட்டுமேதான் மனிதனை தனஸ்ஸுலில்-தாழ்வில் கைது படுத்தி சிறையாக்கிவிட்டது. எப்பொழுது மனிதன் தன்னையும் இன்னும் மற்றவைகளையும் ஹக்குத்தஆலாவையுங்கூட மறந்து விடுகிறானோ அப்பொழுது மனிதன் மனிதனாக இல்லை. என்கிலும், தனது அசலில் பனாவாகிவிட்டான். அழிந்துவிட்டான். அதாவது மனிதன் அழிந்து விட்டான். இன்னும் தரிபாடாக இருந்த ஹக்குத்தஆலாவே தரிபாடாக இருக்கிறான்.

இப்போது ஸாலிக்கு இந்த நுட்பத்தை இரவும் பகலும் தன் கவனத்தில் வைத்துக் கொண்டிருக்க வேண்டும். மேலும் தன்னை மறந்து விடுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஏன்? நீ இல்லாதவனாகவும் இன்னும் தரிபாடான ஹக்குதஆலா தரிபாடாகவும் இருக்கிறதற்காக.

ஆண்டவா! உன்னுடைய நேசர் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்'லம் அவர்களின் பொருட்டினால் எங்களுக்கு இந்தப் பாக்கியத்தை அருள்வாயாக! ஆமீன்! சர்வ உலகத்தார்களையும் போஷிக்கிறவனே!

**நான்காவது மர்தபா அதாவது, நான்காவது இறக்கம் 'ஆலமுல்மிதால்'**

பின்னர் அல்லாஹு தஆலா ஆலத்திற்குப் பூரணமான வெளிப்பாட்டைக் கொடுக்க நாடினதும் ஆலமுல் அர்வாஹின் பேரில், நான்காவது தஜல்லியானான்-தோன்றினான். அத் தோற்றத்தினால் ரூஹு ஒவ்வொன்றும் ஒரு தடிப்பமான உடையை அணிந்தது. இன்னும், அர்வாஹை விடவம் தடிப்பத்தை உண்டாக்கிக் கொண்டு வெளிப்பாட்டில் அபிவிருத்தியானது. இந்த ஆலத்திற்கு, 'ஆலமுல் மிதால்-மாதிரி உலகு', சூட்சுமம் என்றும் ஆலமுல் கியால்-கற்பனை உலகு' என்றும் சொல்வார்கள். எப்படி மனிதனுடைய கற்பனை உலகங்கள் பிளக்காமலும் சேர்ந்து ரேகிக்காமலும் இருக்கிறதோ அதேபோல்தான் இந்த மிதாலுடைய உருவங்களும்.

றூஹுடைய மிருதுவை கவனிக்கிறது கொண்டு இது திண்ணமானதாக இருந்தாலும், பிளக்கிறதை விட்டும் இன்னும் சேர்ந்து ரேகிக்கிறதை விட்டும் இது பரிசுத்தமானதாகும்.

**ஐந்தாவது இறக்கம்-மர்தபா ஆலமுஷ்ஷஹாதத்து-சாக்கிர உலகத்தின் மர்தபா**

இன்னும் எந்தவிதத்தில் சம்பூரண வெளிப்பாடு ஹக்குத்தஆலாவின் விருப்பமாக இருந்ததோ, அது இந்த மிதாலுடைய மர்தபாவிலும் உண்டாகவில்லை. அதனால் அல்லாஹுத்தஆலா ஐந்தாவது தஜல்லியானான்-தோன்றினான். இந்தத் தோற்றத்தில் சம்பூரணத் தடிப்பம் சட்டத்தின் சூறத்தில் உண்டானது. சம்பூரண வெளிப்பாட்டின் மர்தபா வெளியானது. இந்த மர்தபாவுக்கு மர்தபத்துஷ; ஷஹாதத்து-சாக்கிர மர்தபா என்றும், ஐந்தாவது தஜல்லி –தோற்றம் என்றும் சொல்வார்கள். இங்கு சடம் பூரணத் தடிப்பத்தின் காரணத்தால் பிளக்கவும் செய்யும், சேர்ந்து ரேகிக்கவும் செய்யும். இன்னும் இகலோக மரண சீவிய சந்தையும் இதே மர்தபாவில் அதி உக்கிரமானதாக இருக்கிறது. மற்ற மேலேயுள்ள சிருஷ;டியான இரண்டு மர்தபாக்களும் அதாவது ரூஹும், மிதாலும்-ஆன்மாவும், சூக்குமமும்-இகலோகாய, இடையூறான மரண சீவியத்தை விட்டும் பரிசுத்தமானதாகும். அது சதாவுமமான சீவியத்தைக் கொண்டு சீவியமே சீவியமாகும். இதனாலேயே நமக்கு மரணம் வருகிறதென்றால் ஆலமுஷ; ஷஹாதத்து ஆலமுன்னாஸூத்திலேயே, சாக்கிர உலகத்திலேயேதான். மற்றபடி நாம் மிதாலிலும்-சூக்கும உலகத்திலும் மரணிக்க மாட்டோம். அர்வாஹிலும், ஆன்ம உலகிலும் மரணிக்க மாட்டோம். நமக்கு இந்த மர்தபாக்களில் சதாவுமான சீவியம் உண்டு.

இதனால், மனிதன் எதார்த்தத்தில் மரணிக்க மாட்டான். என்கிலும், நாஸூத்துடைய ஆலத்தைவிட்டும் வெளிப்பட்டு விடுவான் என்று விளங்க வருகிறது. அவனுக்கு ஒரு கற்பனையான மரணமேயல்லாது அவன் எப்போதும் சீவனுள்ளவனாகவே இருப்பான்.

**ஆறாம் இறக்கம்-சகல மர்தபாக்களையும் சேர்த்துக் கொண்ட இன்ஸான் காமிலின் சூறத்து.**

பின்னர் ஹக்குத் தஆலா ஒவ்வொரு சூறத்தையும் தனித்தனியே பார்த்தான். பின்னால் எல்லா சூறத்துக்களையும் இரண்டாவது இறக்கத்தில் தனது அறிவின் நோட்டத்தில் சேர்த்து ஒரே சூறத்தின் பேரில் எப்படி நோட்டமிட்டானோ அந்த ஒன்று சேர்ந்த சூறத்திற்கு மர்தபத்துல் வாஹிதிய்யத்து, ஹகீகத்துல் இன்ஸானிய்யா' என்று பெயர் இருந்ததோ, அதே போல் ஒன்று சேர்ந்த சூறத்தின் பேரில் ஆலமுஷ; ஷஹாதத்தில்-சாக்கிர உலகத்தில் சகல உள்ரங்கமான மர்தபாக்களையும், அதாவது வஹ்தத்ததையும், வாஹிதிய்யத்தையும் இன்னும் வெளிரங்கமான மர்தபாக்களையும்-அதாவது அர்வாஹு, மிதால், ஷஹாதத்தையும் சேர்த்து ஒரு சூறத்தை உண்டாக்கி அந்த சூறத்தை ஆலமுஷ; ஷஹாதத்தில் வெளியாக்கினான். அந்த சூறத்திற்கே பெயர் இன்ஸான் காமிலாகும். இந்னும் அந்த இன்ஸான் காமிலின் சூறத்தேதான் வெளி சூறத்தைக் கவனித்து ஆலமுஸ்ஸஙிறாகும்-சிறிய உலகமாகும். மேலும் அதனுடைய அந்தரங்கத்தைக் கவனித்து ஆலமுல் கபீர்-பெரிய உலகம் என்று சொல்லப்படும். பெரிய உலகத்தில் எத்தனை சூறத்துக்கள் வெளியாகி இருக்கிறதோ, இன்னும் காலாகாலம் வரையிலும் எத்தனை சூறத்துக்கள் வெளியாகுமோ, அத்தனையும் பூறாவாக இன்ஸான் காமிலில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இன்னும் அவரை கலீபாவாகவும் பிரதிநிதியாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது.

எனவே, இன்ஸான் காமிலானாவர் சகல உலகங்களுக்கும் அல்லாஹ்வின் புறத்தினால் கலீபாவாக இருக்கும். இன்னும் சகலத்திற்கும் மாலிக்காகவும்- சொந்தக்காரராகவும் இருக்கும். இன்னும் இன்ஸான் காமிலின் பொருட்டினாலேயே உலகத்தின் ஒவ்வொரு அணுக்களுடைய நிலையுமிருக்கிறது. இன்னும் ஒவ்வொரு அணுவணுவையும் வளர்ப்பதும் உண்டாகிறது. அல்லாஹ்தஆலாவின் புறத்திலிருந்து அருள் இன்ஸான் காமிலின் பேரில் இறங்குகிறது. இன்ஸான் காமிலின் சூறத்திலிருந்தே ஒவ்வொரு அணுக்களுக்கும் அதனதன் இயல்புக்கும், அருகதைக்கும் தக்கவாறு அந்த அருள்களிலிருந்து ஒலித்தல் உண்டாகிறது. உலகத்தில் சகல அணுக்களுடைய உசும்புதலும், அதன் வளர்ப்பும், அதன் கண்காணிப்பும் இன்ஸான் காமிலின் மூலமாகவே ஆகிறது.

இன்னும், அந்த இன்ஸான் காமிலுக்குப் பெயர் ஹளரத்து முஹம்மது ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் என்பதாகும். அவர்கள் பேரில் அல்லாஹ் ஸலவாத்தும், ஸலாமும் சதாவும் சொல்வானாக! இன்னும் ஒவ்வொரு காலத்திலும் ஒரு தகுதியான, அருகதையான இன்ஸானுடைய சூறத்தில் ஹகீகத்து முஹம்மதிய்யாவின் வெளித் தோற்றம் உண்டாகும். இன்னும் அவரே 'கையூ முஸல்மான்' 'கௌதுத் தவ்றான்'-காலத்தின் நிலைக்களம்-காலத்தின் காவலர் என்ற பட்டத்தையும் பெறுவார். சகல அணுக்களுக்கும், அவரே

உயிரானவர். ஒவ்வொரு சுவாசம் வாங்கக் கூடியதும், அவருடைய சுவாசத்திலிருந்தே சுவாசம் வாங்குகிறது. உவமான ரீதியாக இன்ஸான் காமில் சேகரித்துக் கொண்டு இருப்பதை இங்கு சுருக்கமாக சேகரித்துக் காட்டுகிறேன். அது ஸாலிக்கின் விளக்கத்திற்கு போதுமானதாகும்.

**இன்ஸான் காமில் சேகரித்துக் கொண்டிருப்பது.**

இன்ஸான் காமலி ஹகாயிகு உல்விய்யாவையும், ஹகாயிகு ஸிப்லிய்யாவையும்-மேலான அகமியங்களையும், கீழான அகமியங்களையும் சேகரித்துக் கொண்டிருக்கிறார். இன்ஸான் காமில், மேலான அகமியங்களுக்கு எதுகையானவராக இருப்பது அவருடைய மிருதுவான பாகத்தினாலாகும். கீழான அகமியங்களுக்கு எதுகையானவராக இருப்பது அவருடைய திண்ணமான பாகத்தினாலாகும். மேலான அகமியங்கள் என்பது கொண்டு கருத்து அல்லாஹ் தஆலாவிற்குச் சொந்தமான இலாஹிய்யான அகமியங்களாகும். அஸ்மாஉ இலாஹிய்யாவாகும். கீழான அகமியங்கள் என்பது கொண்டு கருத்து சிருஷ்டிகளைக் கொண்டு கொழுகிய அகமியங்களாகும்-அஸ்மாவு கௌனிய்யாகும். உதாரணமாக, கீழே உள்ளதின் பேரில் ஆழ்ந்து கவனித்துப் பாருங்கள்.

| **இன்ஸானின் அகமியங்கள்** | **கீழான அகமியங்களுக்கு நேர்பாடாகிறது** |
|---|---|
| நப்ஸு | லௌஹுல் மஹ்பூல் |
| தபீஅத்து- சுபாவம் | அனாஸிறுகள்-பூதங்கள் |
| காபிலிய்யத்து-ஏற்புச் சக்தி | ஹையூலா-ஏற்பு சக்தி |
| ஜுஸ்வுஹைகல் | ஹபா-அணு |
| றஃயு-யோசனை | பலகுல் அத்லஸ்-ஒன்பதாவது வானம் |
| இத்றாக்கு-உணர்வு | பலகுல் கவாகிபு-எட்டாவது வானம் |
| ஹிம்மத்து-ஊக்கம் | 7 வது வானம் |
| வஹ்மு-சந்தேகம் | 6 வது வானம் |
| இல்மு-அறிவு | 5 வது வானம் |
| பஹ்மு-விளக்கம் | 4 வது வானம் |
| கியால்-கற்பனை | 3 வது வானம் |
| பிக்று-சிந்தனை | 2 வது வானம் |
| ஹிப்ளு-மனனம் | 1 வது வானம் |
| குவ்வத்துத்தமு-இரத்த ஓட்டம் | ஸுஹல்-சனி |
| குவ்வத்து தாபிஆ-கழிக்கும் சக்தி | முஷ்தரீ-வியாழன் |
| குவ்வத்து லாமிஸா-தொட்டறிவு | மிற்றீகு-செவ்வாய் |
| குவ்வத்து நாளிறா-பார்த்தறிவு | ஷம்ஸு-சூரியன், ஞாயிறு |
| குவ்வத்து தாயிகா-சுவையறிவு | ஸுஹ்றா-சுக்கிரன் |
| குவ்வத்து ஷாம்மா-முகந்தறிவு | அதாரிது-புதன் |
| குவ்வத்து ஸாமிஆ-கேட்டறிவு | கமறு-சந்திரன் |
| ஹளறாத்து-உஷ்ணம் | பலகுன்னாற்-நெருப்பு மண்டலம் |

| | |
|---|---|
| மாத்தது ஸப்றாவழ-பித்தம் | நெருப்பு |
| மாத்தா தமவி-வாதம் | காற்று |
| மாத்தா பல்கமி-சிலேட்டுமம் | தண்ணீர் |
| மாத்தா ஸௌதாவி-வரட்சி | மண் |
| உமிழ் நீர், சளி, வியர்வை, காதின் அழுக்கு, கண்ணீர், மூத்திரம் | ஆறு சமுத்திரங்கள் |

**7வது பஹ்று முஹீத்து-சூழ்ந்த பெருங்கடல்**

மனிதனுடைய இரத்தம், தோல், நரம்புகளிருக்கக் கூடியது, அதிலிருந்துதான் மேலே சொல்லிய உமிழ்நீர் சளி வகையறாக்களாகிய ஆறு கடல்களும் உண்டாகின்றன. ஆகவே, அது சகலத்தையும் சூழ்ந்த பெருங்கடலைப் போன்றிருக்கிறது. இன்னும் இந்த ஏழு கடல்களுடைய சுவையும் வேறுவேறாக இருக்கிறது. இனிப்பு, புளிப்பு, கசப்பு, இலப்பு, உப்புக்கரிப்பு, துர்வாடை, நறுவாடைகளாம்.

| மனிதனுடைய ஹுவிய்யத்து அதாவது அவனுடைய தாத்து | நேர் ஆதாரப் பொருள் |
|---|---|
| இலட்சணம் | ஆதேயப் பொருள் |
| பல் | ஜமாதாத்து, நிரசப் பொருள் |
| உரோமம் | நபாதாத்து-தாவரப் பொருள் |
| ஷஹ்வது-இச்சை | ஹயவானாத்து-மிருக இனம் |
| பஷரிய்யத்து, சூறத்து-உருவம் | இன்ஸான், மனித உருவம் |
| றூஹு | அரசன் |
| அக்லு -புத்தி | மந்திரி |
| இல்மு-அறிவு | காழி-நீதவான் |
| ஒன்னு-எண்ணம் | கொத்துவால்-கமிஷனர் |
| நரம்புகள், சக்திகள் | போலீஸ்கள் |
| யகீன்-உறுதி | முஃமின் |
| சந்தேகம் | காபிர் |

இன்ஸான் காமில் இலாஹிய்யான அகமியங்களோடு இப்பொழுது ஹகாயிக் உல்விய்யா, ஹகாயிக் இலாஹிய்யா-மேலான அகமியங்கள், தெய்வீக அகமியங்கள் என்று சொல்லப்படுகிற அல்லாஹுத் தஆலாவின் அஸ்மா ஸிபத்துக்களுடன் இன்ஸான் காமில் நேர்பாடாக இருக்கிறதை விபரிக்கப்படுகிறது.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் திருவுளமாகி இருக்கிறார்கள்: 'ஹக்குதஆலா மனிதனை றஹ்மானுடைய சூறத்தில் படைத்தான்'. இன்னுமொரு ஹதீதில் 'அல்லாஹ் உடைய சூறத்தில் படைத்தான்'.

சூறத்து என்று அஸ்மா, சிபாத்து, அப்ஆல்;களுக்கு சொல்கிறார்கள். இந்த ஹதீதுக்கு கருத்தாகிறது:- அல்லாஹ்தஆலா இன்ஸானை தன்னுடைய அஸ்மா, சிபாத்து, அப்ஆல் எனும் இரத்தினங்களை ஜோடித்து இன்ஸானடைய சூறத்தைப் படைத்தான் எனன்பதாகும். அதன் விபரமாகிறது:

| | |
|---|---|
| இன்ஸானின் ஹயாத்து நேர்பாடாகிறது | ஹக்குடைய ஹயாத்துக்கு |
| இன்ஸானின் இல்மு நேர்பாடாகிறது | ஹக்குடைய இல்மு |
| இன்ஸானின் குத்றத்து நேர்பாடாகிறது | ஹக்குடைய குத்றத்து |
| இன்ஸானின் இறாதத்து நேர்பாடாகிறது | ஹக்குடைய இறாதத்து |
| இன்ஸானின் பஸறு நேர்பாடாகிறது | ஹக்குடைய பஸறு |
| இன்ஸானின் கலாமு நேர்பாடாகிறது | ஹக்குடைய கலாமு |
| இன்ஸானின் தாத்து நேர்பாடாகிறது | ஹக்குடைய தாத்து |
| இன்ஸானின் ஹுவிய்யத்து நேர்பாடாகிறது | ஹக்குடைய ஹுவிய்யத்து |
| இன்ஸானின் அனிய்யத்து நேர்பாடாகிறது | ஹக்குடைய அனிய்யத்து |
| இன்ஸானின் குல்லியத்து நேர்பாடாகிறது | ஹக்குடைய குல்லியத்து |
| இன்ஸானின் ஷுமுல் நேர்பாடாகிறது | ஹக்குடைய ஷுமுல் |
| இன்ஸானின் குஸூஸ் நேர்பாடாகிறது | ஹக்குடைய குஸூஸ் |

**கலந்தரியாக்களின் இறக்கத்தின் விபரம்: தாத்து பஹ்து**

இந்த தாத்து பஹ்தின் மர்தபாவில் இஸ்முமில்லை, ஸிபத்துமில்லை, காபிலிய்யத்துமில்லை, இஸ்தி்ஃதாதுமில்லை. மேலம் எதார்த்தத்தில் இவைகளெல்லாம் தாத்தில் அமைந்து கிடக்கின்றன. எப்டியெனில், வித்துக்குள்ளால் விரு;சமும், விருட்சத்தின் சகல பாகங்களுமிருப்பது போல். ஆனால், வித்தை விட்டும் வேறாகவுமில்லை, இன்னும் அதற்கு பேரும் அடையாளமும் இல்லை. எங்கிலும் வித்தின் தாத்து தானாகவேயாகும்.. இதனாலேயே இந்த மர்தபாவை கலப்பற்ற தாத்துடைய மர்தபா என்று சொல்வார்கள். ஏதொன்று ஸிபத்து அல்லது இஸ்மு அல்லது பி்ஃலு அல்லது அதறு என்ற சூறத்தில் ஆதியிலிருந்து அந்தம்


வரையிலும் வெளியாகுமோ அது அத்தனையும்' இந்த மர்தபாவிலிருந்தே வெளியாகும். இன்னும் இந்த மர்தபாவினுடைய தோற்றமேயாகும். ஒவ்வொரு அணுவுக்கும் மஃதன் விளைவிடம் இந்த தாத்தின் மர்தபாவேயாகும். இப்படியிருப்பதோடு, இந்த மர்தபாவில் ஒரு அணுவும் தாத்தை விட்டும் வேறாக இல்லை. இன்னும், ஒரு அணுவுக்கும் இந்த மர்தபாவில் பேரும் அடையாளமும் இல்லை. எல்லாமுமே தாத்தில் தாத்துதானாகவே இருக்கும். இந்த மர்தபாவுக்கு மேலால் ஒரு மர்தபாவுமில்லை. இதனாலேயே, இந்த மர்தபா வேற எந்த மர்தபாவினுடைய இறக்கமுமில்லை. தோற்றமுமில்லை. எங்கிலும் வேறே எத்தனை மர்தபாக்கள் இருக்கிறதோ அவையடங்களும் இந்த மர்தபாவின் தோற்றங்களேயாகும். எல்லாமுமே இந்த மர்தபாவிலேயே இருக்கிறது. வேறொன்றிலுமில்லை. ஆதியிலிருந்து அந்தம் வரையிலும் ஏதொன்றானாலும் வெளியாகிறது இந்த மர்தபாவிலிருந்தே வெளியாகும். இந்த மர்தபாவுக்கு தாத்து பஹ்து என்றும் சொல்வார்கள். உஜூது முத்வக்கு என்றும் சொல்வார்கள்.

உஜூது, தாத்து இரண்டிற்கும் ஒரே கருத்துத் தான். உஜூது பஹ்து அல்லது தாத்து பஹ்து, அல்லது உஜூது மஹ்ளு அல்லது தாத்து மஹ்ளு, உஜூது முத்லக்கு, அல்லது தாத்து முத்லக்கு எல்லாம் ஒன்றேயாகும். உஜூது தாத்துதானேயாகும். தாத்து உஜூதுதானேயாகும். நீங்கள் விரும்பினால் இந்த மர்தபாவுக்கு தாத்து என்று சொல்லுங்கள் அல்லது உஜூது என்று சொல்லுங்கள்.

உஜூது என்பது கொண்டு கருத்து: உண்மை உளது என்பது மட்டுமேயாகும். இன்னும், இந்த உஜூது உலகாதி சகல அணுக்களுக்கும் விளைவிடமும், உறைவிடமுமாகும். ஒவ்வொரு வஸ்துவும் இந்த உற்பத்தியிடத்திருந்தே உண்டாகிறது. இன்னும் காலாகாலம் வரையிலும் உண்டாகிக் கொண்டுமிருக்கும். உலகிலுள்ள ஒவ்வொரு அணுவுக்கும் இந்த உஜூது பஹ்துடன் ஒரே சம்பந்தமேயாகும். அதாவது ஒவ்வொரு அணுவும் ஒரேவிடத்திலிருந்தே, அதாவது தாத்துடைய மர்தபாவிலிருந்தே வெளியானதாகயிருக்கும். இந்த கவனத்தின்படி, எந்த ஒரு அணுவுக்கும் வேறே எந்த ஒரு அணுவின் பேரிலும் மேன்மையுண்டாகிவிடவில்லை. கண்டிப்பாக, வித்தியாசமும், மேன்மையும், வரிசையும் வெளியானதன் பின்னால் சூறத்தை கவனிப்பதினாலும் அஹ்காம ஆதாறுகளை கவனிப்பதினாலுமே உண்டாகிறது. உதாரணமாக, இன்ஸானுடைய சூறத்தும், இன்னும் இனஸ்hனுடைய அஹ்காம், ஆதார்களும் அதாவது அவனுடைய செயல்களும் அவனுடைய புத்தியும், அவனுடைய அறிவும் ஹயவானுடைய சூறத்தின் எதுகையில் வரிசையைப் பெற்றிருக்கிறது. இதனாலேயே இன்ஸான் வெளியானதன் பின்னால் ஹயவானை விடவும் வரியானவனாயிருக்கும். ஆனால், தாத்துடைய மர்தபாவில் இரண்டுபேரும் தாத்து தானாகவேயாகும். அங்கு இன்ஸானுமில்லை, ஹயவானுமில்லை. இருவருக்கும் பேருமில்லை, அடையாளமுமில்லை. இன்னும் இருவரும் உண்டாகிறதற்கு இடமும், இதே பரிசுத்த தாத்தேயாகும்.

இன்ஸானும் ஹயவானும் ஒரே இடத்திலிருந்தே வெளியாகி இந்த உலகத்திற்கு வந்தார்கள். இந்த கவனத்தைக் கொண்டு இன்ஸான் ஹயவான் இரண்டும் ஒன்றேயாகும். யாருக்கும்

யாரை பார்க்கிலும் மேம்பாடும் வரிசையுமில்லை. கண்டிப்பாக, வெளியானதன் பின்னால் ஒன்று ஒன்றைவிடவும் தன்தன் செயலினாலும் குணபாட்டினாலும் வரிசையானதாகும்.




மவுலானா றூமி ரஹ்மத்துல்லாஹி அலைஹி சொல்கிறார்கள்: 'சூங்கே-நேறங்கி அஸீற-றங்கூஷ_த்-மூஸா ஒ பிர்அவன் அந்தற்-ஜங்-ஷ_த்' 'சூன்-நஸற்-அஸ்ங்க்ஹா-பற்தாஷ்தீ-மூஸா ஒ பிர்அவ்னு, தாறந்து ஆஸ்தீ' நிறமில்லாத்தது, நிறத்தின் சிறையில் அகப்பட்டதும் மூஸாவுக்கும், பிர்அவுனுக்குமிடையில் சண்டையுண்டானது'-'எப்பொழுது நிறங்களை விட்டும் கவனத்தை எடுத்துவிட்டாயோ அப்போது, மூஸாவுக்கும், பிர்அவ்னுக்குமிடையில் நேசம் உண்டாகி விட்டது.

அதாவது நிறமெடுத்தக் காரணத்தினால் மூஸாவுக்கும் பிர்அவ்னுக்குமிடையில் சண்டையுண்டானது. நிறத்தை விட்டும் கவனத்தை எடுத்து விடுவானேயானால் மூஸாவும், பிர்அவ்னும் ஒன்றேயாவார்கள். நிறமில்லாதவிடத்தைக் கொண்டு தாத்துடைய மர்தபாவாகும். நிறத்துடைய மகாம் என்பது கொண்டு கருத்து அஸ்மாக்களுடைய மர்தபாவாகும். அது பற்றிக் கீழே வருகிற விளக்கத்தினால் தெரியவரும்.

**கலந்தரியாக்களிடத்தில் முதல் இறக்கம்: மர்தபத்து சிபாத்து**

வித்துக்குள்ளால் விருட்சத்தின் சகல பாகங்களும் அதாவது கொப்பு, கிளை, இலை, மொட்டு, பூ, பழம் எல்லாம் அமைந்து மறைந்திருந்தது போல் தாத்துக்குள்ளால் சகல சிபாத்துகளும் அமைந்திருந்தன. பின்னர் தாத்து தனது ஸிபாத்துகளை நோட்டமிடுவதற்காக வேண்டி தாத்துடைய மர்தாவிலிருந்து சிபத்துடைய மர்தபாவில் தோன்றினது அல்லது சொல்லுங்கள் இறங்கினது. அப்போது அந்த மர்தபாவிற்கு பெயர் மர்தபத்து சிபாத்து-சிபாத்துடைய மர்தபாவென்று வைக்கப்பட்டது. இங்கு தாத்து சிபாத்தை மட்டிலும் அறிந்தது எப்படியென்றால், சீவன், அறிவு, தத்துவம், நாட்டம், கேள்வி, பார்வை, பேச்சு இன்னும் இவைகளின் வழியாக மற்றும் எல்லா இலாஹிய்யத்தான சிபத்துகளும் எப்படியென்றால் கிருபை, பொடை, மன்னிப்பு, சாந்தம், நன்றி மற்றும் ஸிபத்துக்களையும் போல். இNபோல் சிருஷ்க்கிறது, இரணமளிப்பது, உயிராக்குவது, மவுத்தாக்குவது, பாதுகாப்பது, போஷpப்பது, தேவைகளை நிறைவேற்றுவது இன்னும் மற்றவைகளையும் அறிந்தான். ஆனால் இதை அவசியம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அதாவது, சகல சிபத்துகளின் வெளிப்பாடும் இந்த ஏழு சிபத்துகளின் வழியினாலேயே உண்டானது. அதாவது சீவன், அறிவு, தத்துவம், நாட்டம், கேள்வி, பார்வைா பேச்சு இந்த சிபத்துக்கள் மற்ற சிபத்துக்களுக்கு அவசியமானதாக இருக்கும் எப்படி சிருஷ;டிப்பது இந்த ஏழு சிபத்துகளும் இல்லாமல் சாத்தியமாகாதோ அதேபோல் கொடை கொடுப்பதும், இந்த சிபத்துக்களின் பொருட்டினாலேயே வெளியானது. இதனாலேயே ஏழு சிபத்துக்களுக்கும் உம்மஹாத்து சிபத்து அதாவது எல்லா சிபத்துக்களுக்கும் தாய் என்று சொல்வார்கள்.

இதேபோல் இந்த மர்தபத்து சிபாத்தில் அல்லாஹுத்தஆலா சிபாத்தே கௌனியாவையும் அறிந்தான். வானமாக ஆகிறது, பூமியாக ஆகிறது, மனிதனாக ஆகிறது ஹயவானுடைய சூறத்தில் வருகிறதைப்போல் முடிவாக, ஒவ்வொரு அணு அணுவின் சூறத்தின் பேரிலும் வெளியாகிற சிபத்தின் பேரிலும் இந்த மர்தபத்து சிபாத்தில் அறிந்து கொண்டான். இந்த மர்தபாவுக்கு மர்தபத்து சிபாத்து என்றும் இன்னும் கலந்தரியாக்கள் இதற்கு முதல் இறக்கம் என்றும் சொல்வார்கள்.

**கலந்தரியாக்களிடத்தில் மர்தபதுல் அஸ்மா அல்லது இரண்டாவது தஜல்லி அல்லது இரண்டாவது இறக்கம்.**

பின்னர், மற்தபத்து சிபாத்து சம்பந்தமாக ஹக்குத்தஆலா தன்னை சகல சிபத்துக்களின் உடையிலும் வெளியாக்கினான். இந்த உடையில் ஹக்குத்தஆலாவின் தாத்து எந்த சூறத்தில் வெளியானதோ அந்த சூறத்துக்கு இஸ்மு என்று சொல்வார்கள். உவமையில் ஹயாத்தின் உடையில் 'ஹையு'-சீவன் என்ற உடையில் சீவனுள்ளவன், அறிவின் உடையில் அறிவுள்ளவன், தத்துவம் என்ற உடையில் தத்துவமுள்ளவன், நாட்டம் என்ற உடையில் நாட்டமுடையவன், கேள்வி என்னும் உடையில் கேள்வி உடையவன், பார்வை என்னும் உடையில் பார்வையுடையவன், பேச்சு என்னும் உடையில் பேச்சை உடையவன் என்ற சூறத்துகளிலும் வெளியானான். இன்னும் இந்த எல்லா சூறத்துகளுக்கும் இலாஹிய்யான அஸ்மாக்கள் என்று சொல்வார்கள். இது முஸம்மாதானாகவேயாகும். எப்படி தங்கத்தின் உள்ளில் நகைகளின் சூறத்துகள், தங்கத்தின் அஸ்மாக்காளக இருப்பதைப் போல். அதாவது, மோதிரத்தின் சூறத்தும், வளையலின் சூறத்தும் மற்றும் ஒவ்வொரு நகையின் சூறத்தும் இந்த மர்தபாவில் தங்கம்தானாகவே இருக்கிறது. இன்னும் தங்கத்தின் அஸ்மாக்களாகவும் இருக்கிறது. ஆனால் மோதிரம், வளையல் எனடறு மொழித்தலில் வரக்கூடிய இஸ்மாகிறது முஸம்மாதானாகயிருக்கிற ஹகீகிய்யான இஸ்முக்கு இஸ்மாக இருக்கும். அதாவது இஸ்முடைய இஸ்மாக இருக்கும். இந்த மொழித்தலிலான இஸ்மாகிறது முஸம்மா அல்லாததாகும். அதாவது ஹகீககிய்யான இஸ்மின் சூறத்து அல்லாததாகும். இன்னும் முஸம்மா அதாவது தாத்து தானாகயிருக்கிற இஸ்முக்கு இஸ்மாகும். அதாவது இஸ்முக்கு இஸ்மாகும். எப்படி ஹையு, எனும் மொழித்தலிலான இஸ்மாகிறது அதாவது ஹேயினால் சேர்க்கப்பட்ட இஸ்மாகிறது அல்லாஹ்வின் அறிவில் அவனுடைய தாத்து ஹயாத்து எனும் உடையை அணிந்து ஒரு குறிப்பான சூறத்தில் வந்திருந்த அந்த எதார்த்தமான இஸ்முக்கு இஸ்மாக இருக்கும். அந்த எதார்த்தமான இஸ்மு முஸம்மாதாகயிருக்கும். அதாவது ஹக்குத்தஆலாவின் தாத்து தானாக இருக்கும். ஆனால், ஹையு என்று ஹே-யேயினால் சேர்க்கப்பட்ட மொழித்தலிலான இஸ்மாகிறது அந்த எதார்த்தமான இஸ்முக்கு இஸ்மாக இருக்கும். முஸம்மா அல்லாததுவாகும். ஹையு என்பதின் முஸம்மாவாகிறது ஹக்குத்தஆலாவின் தாத்து, ஹயாத்து எனும் உடையை அணிந்தபின் உண்டான சூறத்தாக இருக்கம். அதே சூறத்துதான் எதார்த்தமான இஸ்மும், ஹக்குத்தஆலாவின் தாத்து தானாகவுமாகும்.

இதேவிதமாக எப்பொழுது அல்லாஹுத்தஆலா இல்மு-அறிவு எனும் சிபத்துடைய உடையை அணிந்தானோ அதனால் என்ன சூறத்து அறிவில் உண்டானதோ அது எதார்த்தமான இஸ்மாகும். இன்னும் முஸம்மா அதாவது தாத்துதானாகம். இன்னும் அலீம் என்று ஐன்-லாம்-யே-மீமினால் சேர்க்கப்பட்ட மொழித்தலிலான இஸ்மாகிறது அது எதார்த்தமான இஸ்முடைய இஸ்மாக இருக்கும். அதாவது அல்லாஹ்வின் தாத்தான அறிவின் உடைளை அணிந்து அவனுடைய அறிவின் மர்தபாவில் உண்டான சூறத்திற்கு இஸ்மாக இருக்கும்.எனவே இதன்படியே இலாஹிய்யான சகல அஸ்மாக்களையும் ஒழுங்கு பிடித்துக் கொள்ளுங்கள். அதாவது கதீறு, முரீது, ஸமீஉ, பஸீறு, கலீமு-சக்தியுடையவன், நாட்டமுடையவன், கேள்வியுடையவன், பார்வையுடையவன், பேச்சையுடையவன், என்pறு இந்த மொழித்தலிலான இஸ்முகளும் எதார்த்தமான இஸ்முகளுக்கு இஸ்முகளாகும்.

முடிவாக, அல்லாஹுத்தஆலா எந்த சிபத்துடைய உடையில் தன்னுடைய அறிவில் வெளியானானோ அந்த உடையின் சூறத்திற்கு இஸ்மு என்று சொல்கிறார்கள். அது இலாஹிய்யத்தான் சிபத்தானாலும் சரி, கௌனிய்யான சிபத்தானாலும் சரி. எப்படியென்றால், வானமாகிறது ஒரு கௌனிய்யான சிபத்தாகும். எப்பொழுது அல்லாஹுத்தஆலாவின் தாத்தானது வானமாக ஆகிற உடையை தன்னுடைய அறிவில் அணிந்தானோ அதற்கு இஸ்மு என்று சொல்கிறார்கள். அதாவது வானத்தினடைய சூறத்தில் தனது அறிவில் வெளியானானோ உடை அணிவது கொண்டு கருத்து அந்த சிபத்துடைய சூறத்தில் தன்னுடைய அறிவில் வெளியாவது என்பதாகும்.

ஹக்குத்தஆலா உடை அணிந்தான் என்று நாம் எப்பொழுதாவது சொல்வோமானால் அதைக் கொண்டு 'ஹக்கு தஆலாவின் தாத்து அந்த ஸிபத்தின் பேரில் வெளியானது. அந்த சிபத்துடைய சூறத்தில் வந்தது' என்பதாக தாலிபு அவசியம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

இப்போது விளங்கிக் கொள்ளுங்கள். அல்லாஹுதஆலா தனது அறிவில் எப்பொழுது வானமாக ஆனானோ அந்த வானம் எனும் சூறத்து எதார்த்தமான இஸ்மாகும். இன்னும், அந்த வானமெனும் சூறத்து ஹக்குதஆலாவின் தாத்து தானாகவேயாகும். எப்படி தங்கமானது தனக்குள்ளால் தன்னை மோதிரமாக ஆக்கிப் பார்க்கிறது. ஆனால் வெளியில் மோதிரத்தினுடைய சூறத்து வெளியாகவில்லையானால் அந்த தங்கத்திற்குள்ளே இருக்கிற சூறத்திற்கு இஸ்மு ஹகீகி-எதார்த்தமான இஸ்மு என்று சொல்வோம். இன்னும் இஸ்முடைய முஸம்மாவாகிறது தங்கத்தின் தாத்தாகும். அது இஸ்முதானாகவேயாகும். இந்த இஸ்மு முஸம்மாதானாகவேயாகும். அதாவது மோதிரத்தின் சூறத்து தங்கம் தானாகவேயாகும். இன்னும் தங்கத்தின் தாத்தும் மோதிரம் தானாகவே யாகும். இதேபோல் வானத்தின் சூறத்து ஹக்குத்தஆலாவின் அறிவில் ஹக்குத்தஆலாவின் தாத்துக்கு இஸ்மு ஹகீகியாகும். ஹக்குத்தஆலாவின் தாத்து வானம் எனும் இஸ்முக்கு அதாவது வானம் ஏனம் சூறத்திற்கு முஸம்மாவாகும். இன்னும் வானம் எனும் மொழித்தலிலான இஸ்மாகிறது ஹக்குத்தஆலாவின் அறிவிலுள்ள வானம் எனும் சூறத்திற்கு இஸ்மாகும். இந்த

மொழித்தலிலான இஸ்மாகிறது முஸம்மா அல்லாததாகும். வானம் எனும் சூறத்து அல்லாததாகும்.

இதேபோல், உலகத்திலுள்ள சகல அணுக்களையும் வானத்தின்பேரில் ஒழுங்கு பிடித்துக் கொள்ளுங்கள். அதாவது ஒவ்வnhரு அணுவும் அறிவில் ஒரு சூறத்தில் வருவதாகிறது ஹக்குத்தஆலாவின் சிபத்தாகும். எப்பொழுது ஹக்குதஆலாவின் தாத்து அந்த அணுவின் சூறத்தில் தன்னுடைய அறிவில் வருமேயானால்,தாவது தன்னுடைய அறிவில் அது அணுவாக ஆகிவிட்டதானால் இந்த ஹக்குத்தஆலாவின் சூறத்தாகிறது ஹக்குத்தஆலாவின் ஹகீகிய்யான எதார்த்தமான இஸ்மாக இருக்கும்.

இன்னும் அந்த அணுவின் மொழித்தலிலான பெயராகிறது, உவமையில் 'இலை' என்பதுவாகிறது அல்லாஹுத்தஆலா அவனுடைய அறிவில் தன்னை இலையாக ஆக்கிப்பார்த்தானோ அந்த சூறத்துடைய இஸ்மாக இருக்கும். அப்போது அல்லாஹுத்தஆலாவின் தாத்தானது தனது அறிவில் தன்னை இலையாகிற சிபத்தின் உடையை அணிந்தது போன்றிருக்கிறது. ஆகவே, இதன்பேரில் சகல உலகத்தின் அணுக்களையும் ஒழுங்குப்பிடித்துக் கொள்ளுங்கள். சிறியதானாலும் அல்லது பெரியதானாலும் எப்படி சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், பூமி, மலை, கஸகஸாவின் ஒவ்வரெரு விதையின் சூறத்தும் அல்லாஹ்வின் அறிவில் இஸ்மு ஹகீகியாகும்.-எதார்த்தமான இஸ்முவாகும். ஏன்? ஆதியிலிருந்து அந்தம் வரையிலும் எத்தனை சூறத்துக்கள் வெளியாகுமோ அது அத்தனையம் அல்லாஹிவின் அறிவில் ஒரே கணத்தில் வெளியாகிவிட்டது. அவைகளின் தீர்மானத்தின் எல்லை புத்தியை விட்டும் புறம்பானதாகும். இதனாலேயே அல்லாஹுத்தஆலாவின் தாத்தினுடைய பெயர்களும் எல்லைக்குள்ளாக்கப்படாததாகும். ஹக்குத்தஆலா திருவுளமானது போல் ஏழு கடல்களும் மையாகவும், சகல மரங்களும் எழுது கோலாகவும் ஆனாலும் அவனுடைய இஸ்முகளை மட்டுப்படுத்த மாட்டீர்கள். அப்படியே, பல்லாயிரம் சமுத்திரங்கள் மையாக ஆனாலும் இன்னும் அதேபோல் மரங்கள் எழுதுகோலாக ஆகாலும் அவனுடைய அஸ்மாக்கள் எல்லைக்குட்பட்டதாக ஆகமாட்டா.

ஏன்? எந்த ஒரு அணு வெளியாகுமோ அந்த அணு அவனுடைய அறிவில் அவுனுடைய இஸ்மாக ஆகும். அணுக்களின் வெளிப்பாட்டிற்கோ எல்லை இல்லை. இதனாலேயே அவனுடைய இஸ்முகளுக்கும் எல்லை இல்லை. இன்னும் ஒவ்வொரு இஸ்மும் ஹக்குத்தஆலாவின் தாத்துடைய பெயரேயாகும். அவனுக்கு ஒரு குறிப்பான பெயர் இல்லாது போனாலும் சரி. எங்கிலும் எல்லாப் பெயர்களும் அவனுடைய பெயர்களேயாகும்.

بنام آنکه او نامی ندارد به هر نامی که خوانی سر برآرد

**'பனாமெ-ஆங்கே-வூ-நாமே-நதாறத்-ப-ஹற்-நாமே-கே-கானிஸா பறாதத்'**

'அவன் ஒரு பெயரைக் கொண்டு பெயர் வைக்கப்படாதவனாக இருந்தாலும் நீ சொல்கிற எல்லா பெயர்களையும் ஏற்றுக் கொள்வான்.'

www.sufimanzil.org

இன்னும் இந்த அஸ்மாக்ககளே சிருஷ;டிகளின் ஹகீகத்துகளாகும். சிருஷ;டிகளில் அவைகளின் வெளிப்பாடே ஆகிறது. ஒவ்வொரு அணுவும் அஸ்மா உடைய மர்தபாவில் ஒரு குறிப்பான சூறத்தில் வெளியாகி உள்ளது. அல்லாஹ்வின் தாத்து ஒவ்வொரு அணுவையும் வெள;வேறாகவே அறிந்திருக்கிறது. இன்னும் சகலத்தையம் சேர்த்த விதத்தில் அதாவது சகல அஸ்மாக்களையம் சேர்த்து தன்னுடைய அறிவில் சகலத்தையும் சேகரித்துக் கொண்ட ஒரு குறிப்பான சூறத்திலும் தன்னைப் பார்த்தான். இந்த சேகரித்துக் கொண்ட இஸ்முடைய பெயர்தான் 'ஹகீகத்து இன்ஸானி'யாகும். இன்னும். இன்ஸானின் வெளியிலுள்ள சூறத்தாகிறது அந்த ஹகீகத்து இன்ஸானியுடைய சூறத்தாகும். எப்படி விருட்சத்தின் சகல பாகங்களையும் சேகரித்துக் கொண்ட விருட்சத்தின் சூறத்தைப் போல. அதேபோல் இன்ஸான் சகல இஸ்முகளும் சேர்ந்த ஒரு ஹகீகத்தாகும். இலாஹிய்யான இஸ்மாகட்டும் அல்லது கௌனிய்யான இஸ்மாகட்டும்.

**கலந்தரியாக்களிடத்தில் மர்தபத்து தஜல்லியாத்துல் அப் ஆலிய்யா**

**மூன்றாவது தஜல்லி அல்லது மூன்றாவது தனஸ்ஸுல்**

பின்னர், பூரணமான வெளிப்பாட்டிற்காக வேண்டி ஹக்குத்தஆலாவின் பரிசுத்த தாத்தானது இந்த சூறத்துகளின் பேரில் வெளியில் தோன்றினது. இந்த தோற்றத்திற்கு தஜல்லியுல் அப்ஆல். செயலின் தோற்றம் என்று பெயர். செயல் என்று அசைவுக்கு சொல்கிறார்கள்.எப்படி அறையில் இருக்கின்ற ஒரு மனிதன் வெளியில் வர நாடுவானேயானால் அவன் அவசியம் அசைய வேண்டும். இந்த அசைவிற்குப் பெயர் செயலாகும். இந்த அசைவினால் எப்பொழுது மனிதனுடைய சூறத்தானது அறையை விட்டும் வெளியில் வந்ததோ அந்த வெளியில் வந்த சூறத்திற்குப் பெயர், அவனுடைய அதர்-குணபாடு என்பதாகும். ஏன் அசைவின் காரணத்தினாலேயே இது வெளியாயிற்று. எனவே, இந்த வெளிக்கோலமானது அசைவின் பிரதிபலனும், அசைவின் குணபாடும் போன்றிருக்கிறது. இதேவிதமாக, அஸ்மாக்களெனும் சூறத்தில் ஹக்குத்தஆலாவின் அறிவில் மறைந்திருந்த சூறத்துக்காளகிறது அவைகளை வெளியில் கொண்டு வருவதற்காக ஹக்குதஆலாவின் தாத்தானது அசைந்தது. இந்த அசைவின் குணபாட்டினால் அஸ்மாக்கள் வெளியில் வந்தன. இன்னும் வெளியில் வந்ததும் அவைகளுக்குப் பெயர் அதறு-குணபாடு என்று ஆனது. உவமையில் அல்லாஹ்வின் அறிவுடைய மர்தபாவில் இஸ்மு ஹகீகி என்று சொல்லப்பட்ட வானம் எனும் சூறத்தானது, இந்த அசைவின் தோற்றத்தினால் வெளியில் வந்துவிடுமானால் இப்பொழுது வெளியில் இருக்கிற வானம் முன்பு அது ஹக்குடைய அறிவிலிருந்தது. வெளியில் வந்ததும் அதறு-குணபாடு என்ற பெயரைக் கொண்டு பெயர் வைக்கப்பட்டதாகிவிட்டது. இதே விதமாகத்தான் சூரியன், சந்திரன், நிரஸப் பொருள்கள், பூமி, மேகம், தாவரப் பொருட்கள், மிருகயினங்கள், மற்றவைகளும் இன்னும் எந்த விதமான சகல அஸ்மாக்களும் ஒன்று சேர்ந்து ஒரு சேகரமான சூறத்தில் வந்து ஹக்குத்தஆலாவின் அறிவில் 'இஸ்முல் அஃலம்'- வலுப்பமான இஸ்மு, இன்ஸானுல் காமில்-சம்பூரண மனிதன்' என்று பெயர் வைக்கப்பட்டிருந்ததோ அது இதே விதமாக இந்த அசைவின் தோற்றத்தினால். அதாவது செயலின் தோற்றத்தின் குணபாட்டினால்

வெளியாயிற்று. மேலும் 'கலீபத்துல்லாஹ்'-அல்லாஹ்வின் பிரதிநிதி' என்று பட்டமும் வாங்கிற்று. எனவே இன்ஸான் சகல இலாஹிய்யான அஸ்மாக்களையும் கௌனிய்யான அஸ்மாக்களையும் சேர்த்துக் கொண்டவனாகும். இன்ஸான் சேகரித்துக் கொண்டிருப்பதைப் பற்றி முன்பு சொல்லப்பட்டிருந்ததைப் போல்.

ஆகவே, இந்த விளக்கத்தினால் கலந்தரியாக்களுடைய தனஸ்ஸுலாத்தில்-இறக்கங்களில்- தாத்திற்கு நான்கு மர்தபாக்களே இருக்கின்றன என்று தரிபட்டது.

இன்னும் ஒரு மர்தபாவாகிறது அது கலப்பற்ற தாத்தின் மர்தபாவாகும் அது வேறே எந்த மர்தபாவினுடைய இறக்கமுமில்லை. ஏன் அதற்கு மேலே ஒரு மர்தபாவுமில்லை. இரண்டாவது மர்தபா ஸிபத்துடைய மர்தபாவாகும். அதை கலந்தரியாக்கள் தனஸ்ஸுல் அவ்வல்- முதல் இறக்கம் என்று சொல்கிறார்கள்.

மூன்றாவது மற்தபாவாகிறது நான்காவது மர்தபாவாகிய அதறு சிருஷ;டிகளின் ஹகீகத்துகளாகிய அஸ்மாக்களின் மர்தபாவாகும். அதாவது இந்த மர்தபாவிலுள்ள ஒவ்வொரு இஸ்மும் வெளியிலுள்ள சூரத்திற்கு மஃனாவாகும்-பொருளாகும். வெளியிலுள்ள சூறத்து அதற்கு சூரத்தாகும்-தோற்றமாகும். எப்படி என்றால், அல்லாஹ்வின் அறிவிலுள்ள சூரியன் எனும் சூறத்தானது வெளியிலுள்ள சூரியனுடைய சூரத்திற்கு மஃனாவும் ஹகீகத்துமாகும். பொருளும் அகமியமுமாகும். சூரியனுடைய வெளியிலுள்ள சூறத்தாகிறது அந்த பொருளுக்கு சூறத்தாகும்-உருவமாகும். உதாரணமாக சூரியன் ஹக்கு தஆலாவின் தாத்துடைய மர்தபாவில் ஹக்குடைய தாத்து தானாகயிருந்தது. சிபத்துடைய மர்தபாவில் சிபத்தாக இருந்தது. இஸ்முடைய மர்தபாவில் இஸ்மாக இருந்தது. இன்னும் வெளி மர்தபாவில் அதறு-குணபாடு என்ற பெயரைக் கொண்டு பெயர் வைக்கப்பட்டதாக ஆகிவிட்டது. ஆகவே, இதேபோலவே ஒவ்வொரு அணுவின் துவக்கம், நடுவு, முடிவையும் அறிந்து கொள்ளுங்கள்.

**கலந்தரியாக்களிடத்தில் இறைவழி நடைமுறை**

இந்த நடை சகல தரீகுகளையும் சேகரித்துக் கொண்டதும் சாராம்சத்திலும் சாராம்சமாகவம் இருக்கும். இன்னும் சீக்கிரம் குணபாடு செய்யக் கூடியதும் விரைவில் சேர்த்து வைக்கக்கூடியதுமாகும். இன்னும், எதார்த்தத்திற்கு நேர்பாடானதும் ஒற்றுமையானதுமாகும். ஏனென்றால், தாத்தின் இறக்கமானது சிபத்தளவிலும், சிபத்திலிருந்து இஸ்மு அளவிலும் இன்னும் இஸ்மிலிருந்து செயலளவிலுமாகவே இருக்கிறது. ஒவ்வொரு வஸ்துவுடைய வெளிரங்கமாக சூறத்தும் செயலின் குணபாடாகும். (அல்லாஹ்வின்) அறிவிலலுள்ள அதன் சூறத்தாகிறது எதார்த்தமான இஸ்மாக இருக்கும். இந்த இஸ்மு தாத்து தானாகும். மனிதன் எதுவரையிலும் தன்னுடைய வெளி சூறத்தின் பேரில் கவனத்தை செலுத்தினானோ அது செயலின் குணபாடாகும். எப்பொழுது தனது வெளி சூறத்தை விட்டும் கவனத்தை எடுத்து விடுகிறானோ அப்போது தன்னுடைய சூறத்தை தன் புத்தியில் இருப்பதாகப் பெற்றுக் கொள்கிறான். அப்போது அவன் செயலின் குணபாடாகிய வெளிரங்கமான சூறத்தைவிட்டும் இப்போது நான் எதார்த்தமான இஸ்முவில் போய்விட்டேன் என்று உறுதி கொள்ள வேண்டும்.

பின்னர் தன் நினைப்பை விட்டும் எப்போது கவனத்தை எடுத்துவிடுவானோ அப்போது எதார்த்தமான இஸ்மு அழிந்து விட்டது போலவும், இப்போது அது தாத்து தானாகவே ஆகிவிட்டது என்றும் உறுதி கொள்ள வேண்டும்.

எனவே, ஸாலிக்கே! உனக்கு அவசியம் நீ எந்த கணத்திலும் உன்னை தாத்துக்கு வேறானது என்று கருதக் கூடாது. உலகத்தின் எந்த ஒரு அணுவையும் ஹக்குக்கு வேறானது என்று கருதக் கூடாது. எங்கிலும் உன்னுடைய இந்த எண்ணம் அதாவது ஒவ்வொரு மர்தபாவிலும் நான் ஹக்குத்தானாகுமென்ற இந்த நினைப்பு, யகீனுடைய-திடநம்பிக்கையுடைய பதவிக்கு வரவேண்டும். என்னுடைய வெளிரங்கமான சூறத்தாகிறது அதுவே அல்லாஹ்வின் அறிவில் இஸ்மாயிருந்த உள்ரங்கமான சூறத்தாகும். இன்னும் உள்ரங்கமான சூறத்தாகிறது அல்லாஹ்வின் சிபத்தாக இருக்கும். இன்னும் சிபத்தாகிறது தாத்து தானாகும். ஆகவே, நான் ஹக்குத்தஆலாவின் தாத்து தானாகும். இன்னும் இந்த சூறத்தில் வெளியாகியிருக்கிறேன் என்றும் உறுத்p கொள்ள வேண்டும். அதாவது நான் தாத்தாயிருக்கும். பின்னர் சிபத்தாக ஆனேன். பின் சிபத்திலிருந்து என்னுடைய அறிவில் சூறத்து எடுத்து உருவமாக ஆகி இஸ்மாக ஆனேன். பின் இஸ்மிலிருந்து குணபாடாக ஆனேன். இப்பொழுது நான் திரும்பி, தாத்துடைய மகாமுக்கு இந்தவிதமாக போகிறேன். அதாவது குணபாடு என்று சொல்லக் கூடிய என்னுயைட வெளிரங்கமான சூறத்தை அழித்து விட்டு இஸ்மாக ஆகிறேன். அதாவது என்னுடைய அறிவில் போய் சேர்கிறேன். பின்னர் அறிவில் நின்றும் அறிவிலுள்ள சூறத்தை அழித்துவிட்டு சிபாத்தாக ஆகிறேன். பின் சிபத்ததை விட்டும் வெளிப்பட்டு தாத்தாக ஆகிறேன்.

மிகச் சுருக்கமான சக்திவாய்ந்த மிக்க நம்பிக்கையான எதார்த்தமான முறாக்கபாவாகிறது: ஒரே அடியாக கண்ணை மூடிக் கொண்டு ஹக்குத்தஆலாவின் தாத்தாகிய தன்னுடைய கல்பு இருதயமெனும் சமுத்திரத்தில் தன்னை மூழ்க வைத்துவிட்டு உப்பு சமுத்திரத்தில் கரைந்து போவது போல தன்னை அழித்துவிட வேண்டும். தன்னோடு சகல உலகத்தையும் அழித்துவிட வேண்டும். மனிதன்தானே உலகமாகும். எப்பொழுது மனிதன் அழிந்து விடுகிறானோ அப்போது அவனோடு உலகம் அனைத்தும் அழிந்து விடுகிறது. உலகத்தில் எத்தனை சூறத்துக்கள் இருக்கிறன்றதோ அத்தனையும் மனிதனுடைய சூறத்துகளேயாகும்.

உலகம் ஒரு கண்ணாடி வீடாகும். மனிதனுடைய சூறத்துகள்தான் அதில் காட்சியளிக்கிறது. எப்பொழுது மனிதன் கண்ணாடி வீட்டை விட்டும் வெளிப்பட்டு விடுவானோ ஒரு சூறத்தும் எந்த கண்ணாடியிலும் எஞ்சியிராது. இதே விதமாகவே மனிதனுக்கு அவசியம் அதாவது ஒவ்வொரு அணுக்களுடைய சூறத்துகளையும் தன்னுடைய சூறத்தின் பிரதிபிம்பம் என்று உணர வேண்டும். இன்னும் உலகத்திலுள்ள ஒவ்வொரு அணுவின் உசும்புதலும், ஒடுங்குதலும் என்னுடைய உசும்புதல், ஒடுங்குதலோடு கட்டுண்டதாகும் என்று உறுதி கொள்ள வேண்டும். இன்னும் எப்பொழுது கண்ணை மூடிவிடுகிறானோ அப்போது உறுதி கொள்ள வேண்டும். அதாவது நான் எந்த சூறத்தின் காரணமாக தாத்தை விட்டும் பிரிந்து இருந்தேனோ அந்த என்னுடைய இன்ஸானிய்யத்தான சூறத்து-மனித உருவம் அழிந்து விட்டது. இப்பொழுது நான் தாத்து தானாகிவிட்டேன். வானம், பூமி இன்னும் சகல உலகமும் என்னோடு அழிந்து விட்டது.

இப்போது நான் சூறத்தும் நிறமுமில்லாது சுத்தமாகயிருக்கிறேன். நான் உருவம், நிறமில்லாத, கரையில்லாம சமுத்திரமாக இருக்குமென்ற நினைப்புங் கூட அழிந்துவிட வேண்டும்.

இன்னும் இந்த நானும், சமுத்திரத்தின் நானும் தாத்து தானாக ஆகிவிட வேண்டும்.

ஆண்டவா! உனது நேசர் தீர்க்கதரிசிகளுக்கெல்லாம் நாயகமான எங்கள் அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது பொருட்டினால் எங்களுக்கு இந்த வலுப்பமான வாழ்வைக் கொடுத்தருள்வாயாக! ஆமீன்!

இந்த வாழ்வை உண்டாக்கிக் கொள்ள ஆரம்பவழி-செயலில் பனாவாகிற வழியேயாகும்.

இந்த முறாக்கபா, முஷhஹதா முறையின் படியாக இருக்கும். அதாவது ஒவ்வொரு வஸ்துவின் அசைவையும், ஒடுங்குதலையும் ஹக்குத் தஆலாவின் அசைவு, ஒடுங்குதல் என்பதாக ஒவ்வொரு கணமும் முஷhஹதாச் செய்ய வேண்டும்- பார்க்க வேண்டும்.

இன்னும், இந்த முஷhஹதாவில் தன்னுடைய அசைவு, ஒடுங்குதலையும் கூட ஹக்குத்தஆலாவின் அசைவு, ஒடுங்குதல் என்றே காணுகிற அளவுக்கு பனாவாகிப் போய் விடவேண்டும்.-அழிந்து விட வேண்டும். மேலும் தானும், சகல உலகத்தில் உள்ளவைகளும் இறந்தவைகளே போலும் அதிலுள்ள அசைவு, ஒடுங்குதல் யாவும் ஹக்குத்தஆலாவின் தோற்றமே என்றும் பூரண எகீனோடு காட்சியாகப் பெற்றுக் கொள்கிற அளவுக்கு ஆகிவிட வேண்டும்.

யாராகிலுமொருவர் கன்னத்தில் அடித்தார். மற்றவர் வாயில் ஹல்வாவை வைத்தார் என்றால் அவ்விருவரையும் ஒருவராகவே அறிய வேண்டும். கன்னத்தில் அடித்தது பற்றிய உணர்ச்சியும் இருக்கக் கூடாது, ஹல்வாவின் இன்ப உணர்ச்சியும் இருக்கக் கூடாது. செத்தவனைப் போன்றாக வேண்டும்.

குளுமை, சூடு, மிருது, கடினம், நல்லது, கெட்டது, குப்று, இஸ்லாம் எது பற்றிய உணர்ச்சியுமில்லை. சகலமும் ஹக்குத்தஆலாவின் தாத்துடைய செயலேயாகுமென்று யகீனாகுமானால் அப்போது பனாபில் அப்ஆலுடைய செயலில் நாஸ்தி உடைய பதவி கிடைத்துவிட்டது, செயலுடைய மர்தபாவை விட்:டும் பனாவாகி ஹகீகத்துடைய மர்தபாவில் புகுந்து விட்;டான். இப்பொழுது அதற்குப்பின், பனாபிஸ்ஸிபத்தின் முறாக்கபா-சிபத்தில் பனாவாகிற முறாக்கபா ஆரம்பமாகிறது. அதுவாகிறது, எப்படி ஒவ்வொரு அணுவின் அசைவு ஒடுங்குதலையும், ஹக்குத்தஆலாவின் அசைவு, ஒடுங்குதலாக பெற்றுக் கொண்டானோ அதே விதமாக ஒவ்வொரு அணுவின் சிபத்தையும் ஹக்குடைய சிபத்து என்று பெற்றுக் கொள்வதாகும். அதில் பனாவாகுவதாகும். இதற்கு முறாக்கபாவாகிறது ஒவ்வொரு அணுவின் சகல சிபத்தையும், உவமையில் சீவனை அது தன்னுடையதானாலும் சரி அல்லது மற்றதினுடையதானாலும் சரி ஹக்குடைய சீவன் என்றும், அறிவை ஹக்குடைய அறிவு என்றும், தத்துவத்தை-ஹக்குடைய தத்துவம் என்றும், நாட்டம்-ஹக்குடைய நாட்டம், கேள்வி-ஹக்குடைய கேள்வி, பார்வை-ஹக்குடைய பார்வை, பேச்சு- ஹக்குடைய பேச்சு ஒன்னும்

இவைகளல்லாமல் மற்ற சிபத்துகளையும் உதாரணமாக கொடுக்கல், வாங்கல், ஈகை, குண ஒழுக்கம, மன்னிப்பு, சகிப்பு, மற்றவைகள் சகலத்தையும் ஹக்குடைய சிபத்து என்றும் நினைக்க வேண்டும். இந்த நினைப்பில் தன்னுடைய பேச்சை ஹக்குடைய பேச்சு, எதிரிலிருப்பவனின் கேள்வி-ஹக்குடைய கேள்வி என்றே யகீனாக முஷாஹதாவாகிற-காட்சியாகிற அளவுக்கு பனாவாக வேண்டும். ஒரு கஷ்டமுமில்லாது இந்த யகீன், இன்த முஷாஹதா, இந்த காட்சி உண்டாகிவிட வேண்டும். ஏதும் சிரமம் எஞ்சியிருக்குமேயானால் பனா பூரணமானதில்லை.

எப்பொழுது ஒரு கஷ்டடமுமில்லாது இந்த முஷாஹதாவில் நீ மூழ்கிவிடுவாயோ அப்போது உனக்கு பனாபிஸ்ஸிபாத்துடைய தரஜா உண்டாகிவிட்டது. பின்பு அதற்குப் பின்னால் பனாபித் தாத்துடைய மர்தபாவாகும். இதற்கு முறாகபாவாகிறது தன்னை விட்டும் இன்னும் சகல அணுக்களை விட்டும் செயல்களையும், சிபத்துக்களையும் இல்லாமலாக்கி செயல்களையும், சிபத்துக்களையும் கவனிக்காமல் தாத்தையே முஷாஹதா செய்வதாகும். எந்த நேரமும் தன்னுடைய சூறத்தையும், சகல உலக சூறத்துக்களையும் பார்வையை விட்டும் அகற்றி விட வேண்டும். ஹக்குத்தஆலாவின் தாத்தை மட்டும் எவ்வித சூறத்தும், நிறமும் இல்லாமல் அலை இல்லாத வெறும் சமுத்திரத்தைப்போல் முஷாஹதா செய்ய வேண்டும். சிரமமெடுத்தாலுங்கூட எந்த சூறத்தையும் பார்வையின் முன்னால் நிறுத்த இயலாது. மேலும் எந்த சூறத்திலும் எந்த நிறத்திலும் தன்னையும் பெற்றுக் கொள்ள முடியாது. மற்றதையும் பெற்றுக் கொள்ள முடியாது என்று அளவுக்கு இந்த முறாக்கபாவில் மூழ்கிவிட வேண்டும்.

அல்ஹம்துலில்லாஹ்! இந்த மற்தபா பனாபித்தாத்துடைய மர்தபாவாகும். இந்த மர்தபாவில் ஸாலிக்குடைய தாத்தும், சிபத்தும் சகலமும் ஹக்குதஆலாவின் தர்தில் பனாவாகி விடுகிறது. இங்கு ஸாலிக்குடைய உஜூதும் அதாவது தாத்தும் எஞ்சி இருக்காது. அவனுடைய குணபாடுகளும் எஞ்சியிருக்காது. எப்படி ஐஸானது கரைந்து தண்ணீராகிறது பின் அதனடைய குளுமையாகிய குணபாடும் அழிந்து போய்விடுவதைப் போல். எனவே ஐஸின் தாத்தும் எஞ்சவில்லை. அதன் சிபத்தும் எஞ்சவில்லை. இதேபோல், மனிதனுடைய தாத்தும் எஞ்சவில்லை, அவனுடைய சியத்தும் குணபாடும் எஞ்சவில்லை. சகலமும் ஹக்குத்தஆலாவின் தாத்தில் அழிந்து விட வேண்டும். இந்த நிலையில் மனிதன் முஸ்தஹ்லக்காக- நாஸ்தியானவனாக ஆகிவிடுகிறான். பின்னர், எப்பொழுது ஹக்குத்தஆலா இந்த சூறத்தின் பொருட்டினால் மற்றவர்களை நேர்வழி காட்ட நாடுவானோ இந்த சூறத்திற்கு ஒரு லதீபா நூறானிய்யாவை-ஒளியான நுட்பத்தை அழிந்து போன மனித உருவத்தில் கொடுத்து சிருஷ்டிகளை நேர்வழி காட்டுவதளவில் திரும்ப அனுப்புகிறான். பின்னர் இவர் காமிலான ஷெய்காகவும், சம்பூரணமனிதனாகவும் ஆகி மற்ற சிருஷ;டிகளுக்கு நேர்வழி காட்டுகிறார். ஹக்குத்தஆலா அளவில் சேர்கிற மர்தபாவில் சேர்த்து வைக்கிறார். இப்போது தாலிபுகளின்-இறைவழி நடப்பவர்களின் ஊக்கம் குறைவாக இருப்பதினால் இந்த காலத்தில் இந்த முறாக்கபாவைப் பற்றிய போதனையை இந்த விதமாக சொல்லிக் கொடுக்க வேண்டும்: அதாவது, எப்பொழுது எந்த ஒரு வஸ்துவின் பேரிலும் பார்வை விழுமானால் அதை ஹக்குதஆலாவின் தாத்துதானாகும் என்று உணர்ந்து அதை ஒளியாகவே பார்க்க வேண்டும்.

உவமையில், ஐஸானது எதார்த்தத்தில் தண்ணீராகவே இருக்கும். எங்கிலும், எப்பொழுது தண்ணீர் ஐஸின் சூறத்தில் வந்ததோ இந்த ஐஸின் சூறத்தானது தண்ணீரின் சூறத்தை விட்டும் அலாதியாகி விட்டது. இதனாலேயே இதனுடைய பெயரும் தண்ணீரை விட்டும் அலாதியாக வேறாகிவிட்டது. இப்போது இதற்குப் பெயர் ஐஸாக இருக்கும். ஆனால் எதார்த்தத்தின்படி தண்ணீராகும். தண்ணீரின் பெயரானது ஐஸின் சூறத்தில் வந்ததனால் மாறிவிட்டது போன்றிருக்கிறது.

இன்னும் நீ;ங்கள் அறிவீர்கள்! ஐஸின் சூறத்தாகிறது தண்ணீரின் சூறத்தேதான். வேறே எந்த ஒரு வஸ்துவும் தண்ணீருடன் சேர்ந்து இந்த ஐஸின் சூறத்து உண்டாகவில்லை. எங்கிலும், தண்ணீரானது ஐஸ்தானாகவேயாகும். வெறும் பார்வையில் தண்ணீர் உறைந்து ஐஸாக காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. எங்கிலும் இப்பொழுது ஐஸின் சூறத்து தண்ணீரின் சூறத்திற்கு திரையாக ஆகிவிட்டது. தண்ணீர் பார்வையை விட்டும் மறைந்ததாக இருக்கிறது. ஆனால் புத்தியின் பார்வை தண்ணீரைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. இன்னும் கண்ணின் பார்வை திரையை அதாவது ஐஸின் சூறத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. இதனாலேயே பார்வையை விட்டும் தண்ணீர் மறைந்ததாகவே இருக்கிறது. எதார்த்தமோ வெளியானதும் தண்ணீரேயாகும். துவக்கமானதுவும் தண்ணீராகத்தானிருந்தது. கடைசியானதுவும் தண்ணீரே.

மேலும் நம்முடைய வஹ்மானது-விபரீத புத்தியானது ஒரு கற்பனையான சூறத்தின் திரையில் தண்ணீரை மறைத்து விட்டது. மருட்சியாளர்களின் பார்வையில் ஐஸாக இருக்கும். ஆனால், புத்திமான்களின் பார்வையில் தண்ணீரைத்தவிர வேறொரு வஸ்துவும் மவ்ஜூதாக இருக்கிறதாக இல்லை. ஐஸுடைய சூறத்து வெறும் கற்பனையில் இருக்கிறது. எதார்த்தத்தில் இல்லாததாகும். இப்போது மறந்து கிடப்பவர்களுக்கு அவசியம். எப்போது ஐஸின் பேரில் பார்வை விழுமோ அப்போது ஐஸின் சூறத்தை பார்வையை விட்டும் எடுத்து விட்டு தண்ணீரை அந்த ஐஸின் சூறத்தில் முஷாஹதா செய்ய வேண்டும். மேலும் இந்த முஷாஹதாவில் ஐஸின் சூறத்து நீங்கி தண்ணீரே தண்ணீர் பார்வையில் வரக்கூடிய அளவுக்கு பூரணமான எகீனோடு மூழ்கிவிட வேண்டும். ஏனென்றால் எதார்த்தத்தில் தண்ணீர்தானே மவ்ஜூதானதாகவும்-உளதானதாகவும் ஐஸின் சூறத்து கற்பனையானதும், இலதானதாகவும் இல்லாத்ததும்தானே!

எப்பொழுது ஐஸைப் பார்த்தீர்களோ தண்ணீரேயல்லாமல் ஐஸ் இல்லை என்றே உ'றுதி கொள்ளுங்கள். ஏன்? எது உள்ளதுவாக இருக்கிறதோ அது வெளியானதாகவும் எது கற்பிக்கப்பட்டதாக இருந்ததோ அது அழிந்ததாகவும் ஆவதற்காக. இதே விதமாகவே ஒவ்வொரு வஸ்துக்களும் அல்லாஹுத்தஆலாவின் உஜூதைக் கொண்டே உண்டானதாக இருக்கிறது. எப்படி தண்ணீரின் உஜூதைக் கொண்டே ஐஸின் தோற்றம் இருப்பதை போல எந்த விதமாக நீங்கள் ஐஸை தண்ணீரே தண்ணீர் என்று அறிந்தீர்களோ பார்த்தீர்களோ இன்னும் ஐஸின் சூறத்தை பார்வையை விட்டும் எடுத்து விட்டீர்களோ அதேவிதமாக எந்த சூறத்தின் பேரில் உங்களுடைய பார்வை விழுகிறதோ அந்த சூறத்தை உங்கள் பார்வையை விட்டும் எடுத்துவிட்டு யகீனா உறுதியாக அல்லாஹுத்தஆலாவின் நூறையே-ஒளியையே

பார்த்துக் கொண்டிருங்கள். எந்தவிதமாக, உங்களுக்கு ஐஸின் சூறத்தை எடுத்துவிட்டு தண்ணீரை முஷாஹதா செய்கிற உவமானத்தில் விளக்கிக் காட்டப்பட்டதைப் போல். இப்படி நீங்கள் ஒவ்வொரு வஸ்துவையும் அல்லாஹ்வின் ஒளி என்றே பார்த்துக் கொண்டேயிருப்பீர்களேயானால் சில நாட்களுக்குப் பின்னால் ஒவ்வொரு வஸ்துவின் உசும்புதலம், ஒடுங்குதலும் இன்னும் அதன் பேச்சும், செயலும் ஹக்குத்தஆலாவின் ஒளியின் பேச்சு, செயல் என்றே உங்களுக்'கு அறியப்பட்டதாகவும் யகீனாகவும் ஆகிவிடும். இன்னும் இந்தப் பார்வையிலும், அறிவிலும் இப்படி மூழ்கி விடுவீர்கள். அதாவது உங்களுடைய வாயில் யாரோ ஒருவர் ஹல்வா துண்டை வைத்தாரேயானால் இன்னுமொருவர் உங்களை கன்னத்தில் அடித்தாரேயானால் உங்களிடத்தில் இரண்டு பேர்களும் ஒன்றாகவே ஆகிவிடுவார்கள். மேலும், உங்கள் மனதில் கன்னத்தில் அடித்ததினால் வருத்தமும் உண்டாகாது, ஹல்வாவை தந்ததினால் சந்தோஷமும் உண்டாகாது. இரண்டு வேலைகளும் அதாவது கன்னத்தில் அடித்ததும் ஹல்வா துண்டை தந்ததும் அல்லாஹுத்தஆலாவின் வேலையென்றே அறிவீர்கள். மேலும் சந்தோஷத்துடனும் பொருத்தத்துடனும் அவனளவில் தங்களை அர்ப்பணித்தவர்களாகவே ஆகிவிடுவீர்கள்.

எப்பொழுது உங்களுக்கு இந்த மர்தபா உண்டாகி விடுமோ நீங்கள் செயலில் பனாவானவர்களாக-அழிந்தவர்களாக ஆகிவிடுவீர்கள். இதற்குப் பின்னால் இப்படியே இந்த முறாக்கபாவில் உறைந்து விடுவீர்களேயானால் இன்னும் ஒவ்வொரு வஸ்துவையும் சூறத்து இல்லாமல் ஹக்குத்தஆலாவின் ஒளிதானாகவே பார்த்துக் கொண்டே இருப்பீர்களேயானால், இன்னும் நீங்கள் முயற்சி செய்தாலும் எந்த ஒரு சூறத்தும் திரையாக ஆகி உங்களின் பார்வையின் முன்னால் வராமல் வெறும் ஒளியே ஒளியாகவே பார்வையில் வந்து கொண்டிருக்குமேயானால், அப்போது நீங்கள் பனாபில் அப்ஆலுடைய மர்தபாவை விட்டும் நீங்கள் முன்னேறி பனாபிஸ்ஸிபாத்துடைய மர்தபாவில் சேர்ந்து விடுவீர்கள். அப்போது உங்களுடைய பார்வையில் எந்த வஸ்துவின் என்த சிபத்தையும் பெற்றுக் கொள்ள மாட்டீர்கள். எங்கிலும், ஒவ்வொரு வஸ்துவின் சீவன் எனும் சிபத்தையும் அது அல்லாஹ்வின் சீவனே என்றும், அதன் அறிவு எனும் சிபத்தை அது அல்லாஹ்வின் அறிவே என்றும், அதன் தத்துவம் எனும் சிபத்தை அது அல்லாஹ்வின் தத்துவமே என்றும், நாட்டம் எனும் சிபத்தை அது அல்லாஹ்வின் நாட்டமே என்றும், இன்னும் கேள்வி, பார்வை பேச்சு மற்றவைகளையும் அல்லாஹ்வின் சிபத்தே என்றும் பூரணமான யகீனாக பெற்றுக் கொள்வீர்கள். எதுவரையிலுமென்றால், தானம், உபகாரம், மன்னிப்பு, சாந்தம், கோபம், கிருபை இந்த எல்லா சிபத்துகளும் ஹக்குத்தஆலாவின் சிபத்து என்றே தரிபாடாகிவிடும். மேலம் உங்களுடைய சகல சிபத்துகளும் கூட அல்லாஹ்வின் சிபத்துக்களாகவே ஆகிவிடும். என்னுடைய சீவன் என்னுடைய அறிவு, தத்துவம், நாட்டம், கேள்வி, பார்வை, பேச்சு இதேபோல என்னுடைய கொடை, மன்னிப்பு, கிருபை மற்றும் சகல சிபத்துகளும் அல்லாஹுத்தஆலாவின் சிபத்துக்களேயாகும். பேசுகிறவன் அவனேதான். கேட்கிறவனும் அவனேதான். பார்க்கிறவனும், காட்சியளிக்கிறவனும் அவனேதான் என்றும் உங்களுக்கு யகீனாகிவிடும். நீங்கள் அல்லாஹ் அல்லாதவருடைய சப்தத்தை கேட்கவோ அல்லது அல்லாஹ் அல்லாதவருடைய கொடுக்கல், வாங்கல்களை பார்க்கவோ வேண்டுமென்று சிரமப்பட்டு விரும்பினாலும் நீங்கள் பார்க்க

மாட்டீர்கள், காணமாட்டீர்கள் என்கிற அளவுக்கு இந்த முறாக்காபாவில் மூழ்கி விடுங்கள். அப்போது நீங்கள் சிபத்தில் பனாவானவர்களாக ஆகிவிடுவீர்கள். மேலும், பனாபிஸ்ஸிபாத்துடைய மர்தபாவில் புகுந்து அல்லாஹுத்தஆலாவின் சிபத்துக்களைக் கொண்டு இலட்சணம் பூண்டவர்களாக ஆகிவிடுவீர்கள். இதற்குப்பின்னால் நீங்கள் பார்வையை விட்டும் சிபத்தின் திரைகளையும் எடுத்துவிட்டு கலப்பற்ற ஒளியை இன்னும் ஹக்குத்தஆலாவின் தாத்து தன்னை முஷாஹதா செய்வதை-காட்சியை ஒவ்வொரு வஸ்துவிலும் உண்டாக்கிக் கொள்ள முயற்சி செய்யுங்கள்.

இன்னும் ஒவ்வொரு வஸ்துவின் சூறத்தையும், இன்னும் சிபத்துகளையம் பார்வையை விட்டும் உயர்த்தி பரந்த ஒரு ஒளியை முஷாஹதா செய்கிறதிலேயே மூழ்கி விடுங்கள். இன்னும் உங்களுடைய சூறத்தும், சிபத்துக்களும் இன்னும் மற்றவைகளின் சிபத்துக்களும் பார்வையைவிட்டும் எடுபட்டுப் போய் ஹக்குத்தஆலாவின் தாத்துடைய சிபத்துக்களுங்கூட உங்களின் அறிவை விட்டும், பார்வையை விட்டும் எடுபட்டுபோய் கலப்பற்ற தாத்துடைய முஷாஹதா உண்டாகிற அளவுக்கு நீங்கள் இதில் உறுதியோடு முயற்சி செய்யுங்கள்.

நீங்கள் உங்களை எப்படி ஐஸானது அது கரைந்து தண்ணீராக ஆகி இன்னும் தண்ணீரில் ஐஸிலிருந்த குளிர்ச்சியுங்கூட இல்லாமலாகி விட்டதோ-ஏன்? ஐஸ் கரைந்து விட்டாலும், ஐஸிலுள்ள குளிர்ச்சி கொஞ்ச நேரம் வரையிலும் தண்ணீரில் இருக்குமே, அதே விதமாக தாத்தில் பனாவானவர்களாக பெற்றுக் கொள்வீர்கள். இந்த விதமாக நீங்கள் பனாவாகிவிட்டீர்கள். எங்கிலும் உங்களுக்கு உங்களுடைய நினைப்பும் உங்கள் சிபத்துடைய நினைப்பும் எஞ்சி இருந்து விடுகிறது. ஆனாலும் பனாபித்தாத்துடைய மர்தபாவில் உங்களுக்கு உங்களுடைய தாத்துடைய நினைப்பும் சிபத்துக்களுடைய நினைப்பும் இருக்காது. நீங்கள் கலப்பற்ற மஃதூமாகவும் இல்லாததுவாகவும், பானி முத்லக்காகவும்-மொத்தமாக அழிந்தவர்களாகவும் ஆகிவிட்டீர்கள். இன்னும் தரிபாடானதாக அல்லாஹுத்தஆலாவின் தாத்து மட்டுமே ஆகிவிட்டது. அதுவும் தனித்த தாத்தேதான். சிபத்துகளின் திரைகளும் கூட எடுபட்டுவிட்டது.

இந்த நிலையில் இப்போது நீங்கள் பானிபித்தாத்தாக-தாத்தில் பனாவானவராக ஆகிவிடுவீர்கள். இன்னும் பனாபிததாத்துடைய மர்தபா உண்டாகிவிடுகிறது. இன்னும், நீங்கள் பனாவானவர்களாகவும், தரிபாடான அல்லாஹுத்தஆலா துவர்க்கமில்லாதவனாகவும், முடிவில்லாதவனாகவும் தரிபாடானவனாகவும் இருந்து விடுகிறான். இந்த நிலையில் உங்களுக்கு உங்களைப் பற்றியும் அறியாமை, சகல உலகத்தைப் பற்றியும் அறியாமை, மேலும் அல்லாஹுத்தஆலாவைப் பற்றியும் கூட அறியாமை உண்டாகிவிடுகிறது. உங்களுக்கு அல்லாஹ்வைப் பற்றிய அறிவு உண்டாகுமானால் நீங்கள் பனாவானவராக ஆகாதது போலும் இப்பொழுது நீங்கள் தரிபாடானவராக இருப்பதை போலுமாகிறீர்கள். எதுவரையிலும் நீங்கள் இருக்கிறீர்களோ, அதுவரையிலும் எதார்த்தமான தரிபாடான ஹக்குத்தஆலாவின் தோற்றம் உண்டாகாது.

பனாபித்தாத்திற்குப் பின்னால் ஹக்குத்தஆலா அவனின் கிருபையினால் உங்களுக்கு வேறே ஒரு ஒளியான நன்கொடையான உஜூதைக் கொடுத்து உங்களுக்கு உணர்ச்சியையும் கொடுத்து போதையை விட்டும் தெளிவுக்கு கொண்டுவந்து அவனுடைய சிருஷ;டிகளை நேர்வழி காட்டுவதற்காக திரும்ப அனுப்புகிறான். அப்போது நீங்கள் காமில் முகம்மிலாக-சம்பூரணமானவராகவும் சம்பூரணமாக்கி வைப்பவராகவும் ஆகி அல்லாஹுதஆலாவின் மற்றும் அடியார்களை நேரான பாதையில் நடத்தாட்ட சக்தி பெறுவீர்கள். இன்னும் நாடப்பட்ட தானம் வரையிலும் அதாவது பனாபித்தாத்து வரையிலும் சேர்த்து வைக்கவும் சக்தி பெறுவீர்கள்.

ஆண்டவனே! உன்னுடைய ஹபீபாகிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொருட்டால் எங்களை இந்த மர்தபாவைக் கொண்டு பாக்கியம் பெற்றவர்களாக ஆக்குவாயாக! ஆமீன்! ஆமீன்! யாரப்பல் ஆலமீன்!

அறிந்து கொள்ளுங்கள்! இந்த முறாகபாவானது சகல தரீகுகளின் சாராம்சத்திலும் சாராம்சமாகும். எல்லா தரீகுகளாலும் ஏகோபித்து ஒப்புக் கொள்ளப்பட்டதுமாகும். இன்னும் இது சகலத்தையும் சேர்த்துக் கொண்ட முறாகபாவாகும். இந்த முறாகபாவை வழக்கமாக செய்து வருவதனால் மனிதன் காமிலாகவும் முகம்மிலாகவும் ஆவான். இன்னும் அல்லாஹ்வின் வரிசையைக் கொண்டு கௌதாக ஆகிற பர்தாக ஆகிற மர்தபாவரைக்கும் போக சக்தி பெறுவான். அது அல்லாஹ்வின் வரிசையாகும். அதை அவன் நாடினவர்க்கு கொடுப்பான். அல்லாஹ் வலுப்பமான வரிசையுடையவனாக இருக்கும்.

ஆனாலும் இந்த முறாகபா முஷாஹதாவில் இதுவும் ஷறத்தாகும்-இன்றியமையாததாகும். அதாவது ஸாலிக்கு தனது இடது மார்புக்குக் கீழ் இருக்கிற இருதய கமலத்தை மர்க்கஸாக-மத்தியாக ஆக்கிக் கொண்டு சகல உலகத்தையும் அந்த இருதயத்தின் வட்டத்திற்குள் அடங்கினதாக ஆக்கிக் கொள்ள வேண்டும். இன்னும் என்னுடைய இருதயத்தின் வட்டத்திற்குள் சகல சிருஷ்டிகளும் சூழப்பட்டு இருக்கிறது. மேலும் என்னுடைய இருதயம் சமுத்திரமாகும். சிருஷ்டிகளில் எத்தனை சூறத்துகள் இருக்கிறதோ அவைகளத்தனையும் என்னுடைய இந்த இருதயமெனும் சமுத்திரத்தினுடைய அலைகளாகும். இது உலகத்திலும் என்னுடைய இருதயத்தை தவிர வேறொரு வஸ்துவுமில்லை என்று இப்படியே இரவும் பகலும் உறுதி கொள்ள வேண்டும்.

கல்பு-இருதயம் என்பது என்ன? அது அல்லாஹுதஆலாவின் ஒளியாக இருக்கும். அது இந்த சூறத்துகளிலெல்லாம் வெளியாகி இருக்கிறது. ஆகையினால் ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு வஸ்துவையும் பார்க்கும் போதும் காணம் போதும் தன்னுடைய கல்பின் பேரிலேயே பார்வை இருக்க வேண்டும். இன்னும் உறுதியாக இவைகளெல்லாம் என் கல்பினுடைய சூறத்துகளாகும். என் கல்புதான் வானமும், பூமியுமாகும். இன்னம் இதற்குள் எத்தனை சூறத்துகள் இருக்கிறதோ அவைகளத்தனையும் என்னுடைய கல்பாகும்-அதாவது அல்லாஹுத்தஆலாவின் ஒளியாக இருக்கும். அதைத்தான் நான் என்னுடைய கல்பு என்று நம்புகிறேன். இன்னும் கல்பின் பக்கம் திரும்பி பார்த்தானேயானால் சகல உலகமும் என் கல்புக்குள் இறங்கி இருக்கிறது என்று

உறுதி கொள்ள வேண்டும். மேலும் சர்வ உலகமும் என் கல்புக்குள்ளேயே இருக்கிறது. என் கல்பைவிட்டும் ஒரு வஸ்துவும் புறம்பாக இல்லை என்றும் ஒவ்வொரு நேரமும் உறுதி கொள்ள வேண்டும்.

எப்பொழுது உலகத்தின் பேரிலும் அதிலுள்ள சூறத்துகளின் பேரிலும் பார்வை விழுமோ அப்போது இவைகளெல்லாம் என்னுடைய கல்பின் சூறத்துகளே என்றும், எப்பொழுது பார்வையை சூறத்துகளை விட்டும் உயர்த்துவானோ அப்போது என் கல்பு எனும் சமுத்திரம் இப்போது அலைகளிலல்லாதிருக்கிறது என்றும், எப்போது சூறத்துகளின் பேரில் பார்வை விழுமோ அப்போது என் கல்பெனும் சமுத்திரம் இப்போது அலை மோதிக் கொண்டிருக்கிறது என்றும் உறுதி கொள்ள வேண்டும்.

ஆரம்பத் திசையிலுள்ள தாலிபுக்கு அவசியம் அவன் கண்ணை மூடுவானேயானால் எப்படி வெளிரங்கமான சூறத்துகளெல்லாம் கண்ணை விட்டும் நீங்கி போய்விடுகிறதோ அதேபோல் எதார்த்தமாகவே இப்பொழுது என் கல்பு எனும் சமுத்திரத்தை விட்டும் சூறத்துகளெனும் அலைகளெல்லாம் அழிந்து போய்விட்டன. இப்போது பூமி, வானம் இன்னும் சகல உலகத்தையும் என் கல்பின் சமுத்திரமே சூழ்ந்து கொண்டிருக்கிறது. இன்னும் ஒரு சூறத்தாவது என் கல்பில் அழியாததாக இல்லை. சகல உலகமும் அழிந்து விட்டது. ன் கல்பின் ஒளியான சமுத்திரம் ஒரு சூறத்துமில்லாமல் சகல கீழ் உலகத்திலும் மேல் உலகத்திலும் நிரம்பினதாக இருக்கிறது என்று உறுதி கொள்ள வேண்டும்.

சில காலத்திற்குப் பின்னால் கண்ணை மூட வேண்டிய அவசியமுமில்லாது போய் விரும்பினபோது உலகத்தின் சூறத்துகளை எனது கல்பு எனும் சமுத்திரத்தின் அலைகளின் சூறத்துகளில் வெளியானது என்றும் பார்க்கவும். விரும்பினபோது கண் திறந்தவனாகவே உலகத்தின் சூறத்துகளை எல்லாம் அழிந்து போனதாகவும் கல்பின் ஒளிச் சமுத்திரத்தை நிறமில்லாததாக பார்க்கவும் முடியுமென்ற அளவுக்கு இந்த முறாகபாவில் முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் போதும்! மற்றது வீணாசை!!

**உயர்த்தியான காதிரிய்யா தரீகாவின் திக்றுகள்**

எல்லாவற்றிற்கும் முதலாவதாக தாலிபுக்கு தாத்துடைய இஸ்மின்-அதாவது 'அல்லாஹ்' என்ற இஸ்முடைய திக்றை சொல்லிக் கொடுக்கிறார்கள். முதலாவது மூன்று விதத்திலும் பராசியமாக உரத்த சப்தத்தோடு ஒரு அடியாகச் செய்வது அதாவது அல்லாஹ் எனும் இஸ்மை அழுத்தமாகவும், நீட்டியும் உரத்த சப்தத்தோடும் கல்பு, தொண்டை இரண்டின் சக்தியோடு சொல்லி பின் நிறுத்தி விடவேண்டும். அதாவது திக்று செய்கிறவனின் சுவாசம் தானத்தின் பேரில் வரவேண்டும். பின்பு இதேபோல் திரும்பத் திரும்ப திக்று செய்ய வேண்டும். பதம் வாயிலிருந்து வரவேண்டும். கல்பிலிருந்தும் வரவேண்டும். அதன் பொருள் அதாவது அல்லாஹுத்தஆலாவின் தாத்து கல்பில் இருக்க வேண்:டும்.

*இரண்டாவது:-* இரண்டு அடியான திக்றாகும். தாத்துடைய இஸ்மை அதாவது அல்லாஹ் எனும் பதத்தை சக்தியோடும், கடுமையாகவும் ஒரு விடுத்தம் தனது வலது மூட்டுக்காலின்

பேரில் அடிக்க வேண்டும். இரண்டாவது அதிகக் கடுமையாக சக்தியோடு கல்பின் பேரில் அடிக்க வேண்டும். ஆனால் இருப்பு தொழுகைக்கு இருப்பது போலிருக்க வேண்டும். இன்னும் கல்பில் அல்லாஹுத்தஆலாவை ஞாபகம் செய்ய வேண்டும். அதாவது கல்பில் அல்லாஹுத்தஆலா வெளியாகி இருக்கிறான் என்றும் இன்னும் கல்பில் ஒவ்வொரு அடி அடிக்கிறவிடத்திலும் அல்லாஹ் எனும் இஸமை சொல்வதோடும் முஸம்மாவை அதாவது அல்லாஹ்வை ஹாளிராக இருக்கிறான்-வெளியாகி இருக்கிறான் என்றும் தரிபடுத்த வேண்டும்.

*மூன்றாவது* மூன்று அடியான திக்றாகும். இந்த திக்று செய்யும்போது சம்மணமாக இருக்க வேண்டும். அல்லாஹ் என்று அழுத்தமாகவும் சக்தியோடும் ஒரு விடுத்தம் வலது முட்டுக்காலிலும், இரண்டாவது விடுத்தம் இடது முட்டுக் காலிலும், மூன்றாவது விடுத்தம் கல்பிலும் அடிக்க வேண்டும். ஆனால் கல்பில் அடிப்பது எல்லாவற்றையும் விடவும் அதிக அழுத்தமாகவம், சக்தியோடுமிருக்க வேண்டும். கல்பில் சூடு உண்டாக வேண்டும். அல்லாஹ்வின் ஹுளூறும் உண்டாக வேண்டும். வலது முட்டுக் காலில் அடிக்கும்போது அல்லாஹுத்தஆலாவை வலது பக்கமும் இடது முட்டுக்காலில் அடிக்கும்போது இடது பக்கமும், கல்பில் அடிக்கும் போது கல்பிலும் ஹாளிராக இருப்பதாக நினைக்க வேண்டும். உறுதி கொள்ள வேண்டும். ஹக்குத்தஆலாவின் ஷ{ஹூது காட்சி எல்லா பக்கமும் உண்டாகி திக்று செய்கிறவன் சகல பக்கத்திலிருந்தும் அல்லாஹ்வின் ஒளியில் மூழ்கி விடுகிறான் என்று யகீனாக வேண்டும்.

நான்காவது, நான்கு அடியான திக்றாகும். இருப்பு சம்மணமாக இருக்க வேண்டும். அல்லாஹ் எனும் இஸ்மை ஒரு விடுத்தம் வலது முட்டுக்காலிலும், இரண்டாவது விடுத்தம் இடது முட்டுக் காலிலம் மூன்றாவது விடுத்தம் கல்பிலும், நான்காவது விடுத்தம் முன்னாலேயும் அடிக்க வேண்டும். ஆனால், நான்காவது அடி எல்லாவற்றையும் விடவும் மிகவும் அழுத்தமாகவும் சக்தியோடுமிருக்க வேண்டும். இன்னும் ஒவ்வொரு இடத்திலும் அல்லாஹுத்தஆலா ஹாளிராக இருக்கிறான் என்பதாகவும் தரிபடுத்த வேண்டும். நாலாபக்கத்திலிருந்தும் அல்லாஹ்வின் ஒளி இவனை சூழ்ந்து கொள்ள வேண்டும்.

**பராசியமாக நப்யு, இத்பாத்தின் திக்று**

கண்ணை பொத்திக் கொண்டு கிபுலாவை முன்னோக்கி தொழுகை;கு இருப்பது போல் உட்கார்ந்து கொண்டு'லா' என்று தொப்புளிலிருந்து வலதுபுறம் வரையிலும் இழுக்கவும். இன்னும் சகல உலகத்தையும் கல்பை விட்டும் வெளிப்படுத்தி வலது பக்கமாக வீசி விட்டேன், சகல சூறத்துகளும் அழிந்து போய்விட்டன என்று நினைக்க வேண்டும்.

பின்'இலாஹ' என்று சொல்லவும். 'இலாஹ' எனும் பதத்தை மூளைக்குமேல் தோலிலிருந்து வெளியாக்கிவிட்டதாகவும் நினைக்க வேண்டும்.

'இல்லல்லாஹ்' என்று அழுத்தமாகவும் பலமாகவம் கல்பில் அடிக்க வேண்டும். இன்னும் அல்லாஹுத்தஆலாவின் தாத்தை தவிர ஒன்றுமே மவுஜூதாக-உள்ளதாக இல்லை. அவனே என் கல்பில் வெளியாகி இருக்கிறான் என்றும் அறிய வேண்டும். அதாவது லாஇலாஹ

என்பதைக் கொண்டு ஹக்கு அல்லாத்ததை இல்லை என்று மறுக்கவும், இல்லல்லாஹ் என்பதைக் கொண்டு அல்லாஹுதஆலாவை மவுஜூது-இருக்கிறவன் என்று கல்பில் தரிபடுத்தவும் வேண்டும்.

சில ஷெய்குமார்கள் ஆரம்ப திசையிலுள்ளவரகக்கு அல்லாஹ் அல்லாதவை வணங்கப்பட்டதாக ஆகிறதை இல்லை என்று மறுப்பது கருத்து என்று படித்துக் கொடுப்பார்கள். அதாவது ஆரம்ப திசையிலுள்ளவன் லாஇலாஹ என்று சொன்னால் ஹக்கு அல்லாத வணங்கப்பட்டவர் ஒருவருமில்லை என்றும், இன்னும் இல்லல்லாஹ் என்று சொன்னால் அல்லாஹ்வே வணங்கப்பட்டவன் என்றும் உறுதி கொள்ள வேண்டும், உறுதியாக நம்ப வேண்டும். இன்னும் அந்த வணங்கப்பட்டவனை-அல்லாஹ்வை கல்பில் தரிபடுத்த வேண்டும்.

இன்னும் நடுத்தரமானவன் லாஇலாஹ என்பதைக் கொண்டு ஹக்கு அல்லாதவர் நாடப்பட்டவராக இருப்பதை மறுக்க வேண்டும். இல்லல்லாஹ் என்று சொல்லி ஹக்குத்தஆலா நாடப்பட்டவனாக இருப்பதை மனதில் தரிபடுத்த வேண்டும்.

இன்னும் தீர்மானத்தையுடையவன் ஹக்குத்தஆலா அல்லாதவை மவுஜூதாக-உள்ளதாக இருப்பதை மறுக்க வேண்டும். இல்லல்லாஹ் என்று சொல்லி ஹக்குத்தஆலா மவுஜூதாக-உள்ளவனாக இருப்பதை கல்பில் தரிபடுத்த வேண்டும். அதாவது 'லாஇலாஹ' ஒருவரும் மவுஜூதாக இல்லை 'இல்லல்லாஹ்' ஹக்கு தஆலாதான் மவுஜூதாக இருக்கும்.

**இரகசியமான திக்று**

பராசியமான திக்றுக்குப் பிறகு இரகசியமான திக்றை படித்துக் கொடுப்பார்கள். அதாவது, திக்று ஜலியுடைய-பராசியமான திக்றுடைய குணபாடுகளும் ஒளிகளும் தாலிபில் உண்டாகிவிடுமானால் திக்று கபீ-இரகசியமான திக்றை படித்துக் கொடுக்க வேண்டும்.

அதன் முறையாவது கண்ணை மூடிக் கொண்டு உதட்டோடு உதட்டை சேர்த்துக் கொள்ள வேண்டும். இன்னும் மனதினால் 'அல்லாஹு ஸமீஉன்' என்று தொப்புளிலிருந்து நெஞ்சு வரையிலும் இழுக்க வேண்டும். இன்னும் 'அல்லாஹு பஸீறுன்' என்று நெஞ்சிலிருந்து மூளை வரையிலும் இழுக்க வேண்டும். இன்னும் அல்லாஹு அலீமுன் என்று மூளையிலிருந்து அறுஷ{ வரையிலும் சேர்க்க வேண்டும். இதற்கு உறூஜ் - ஏற்றம் என்று சொல்வார்கள்.

பின் அருஷிலிருந்து 'அல்லாஹு அலீமுன்' என்று மூளை வரைக்கும் இறக்க வேண்டும். இன்னும் அல்லாஹு பஸீறுன் என்று மூளையிலிருந்து நெஞ்சு வரையிலும் இறக்க வேண்டும். பின் நெஞ்சிலிருந்து அல்லாஹு ஸமீஉன் என்று தொப்புள் வரையும் கொண்டுவிட வேண்டும். இது இரகசியமான திக்றின் ஒரு சுற்றாக இருக்கும். இதேபோல் திரும்பத்திரும்ப திக்று செய்ய வேண்டும். ஆனால் அல்லாஹு ஸமீஉன் என்று சொல்லும்போது ஹக்குத்தஆலாவின் தாத்தும் அவனுடைய கேள்வி எனும் சிபத்தும் கவனத்தில் இருக்க வேண்டும். அதாவது, அல்லாஹுத்தஆலா கேட்கிறவனாக இருக்கும். அதனுடைய தாத்து அவனுடைய கேள்வி எனும் சிபத்தைக் கொண்டு என்னுடைய தொப்புளிலிருந்து நெஞ்சு

வரையிலும் வெளியாகி இருக்கிறது என்றும், இன்னும் அல்லாஹு பஸீறுன் என்று சொல்லும்போது அவனுடைய தாத்து அவனுடைய பார்வை எனும் சிபத்தைக் கொண்டு என்னுடைய நெஞ்சிலிருந்து மூளைவரைக்கும் வெளியாகி இருக்கிறதென்றும் இன்னும் அல்லாஹு அலீமுன் என்று சொல்லும்போது அவனுடைய தாத்து அறிவு எனும் சிபத்தைக் கொண்டு என்னுடைய மூளையிலிருந்து அர்ஷு வரையிலும் வெளியாகி இருக்கிறது என்றும் அறிய வேண்டும்.

இன்னும் இதேபோல் இறக்கத்திலும் அல்லாஹு அலீமுன் எனும்போது அவன் அறுஷிலிருந்து என் மூறை வரையிலும் இன்னும் அல்லாஹு பஸீறுன் என் மூளையிலிருந்து நெஞ்சு வரையிலும், இன்னும் அல்லாஹு ஸமீஉன் என் நெஞ்சிலிருந்து தொப்புள் வரையிலும் வெளியாகியிருக்கிறான் என்றும் அறிய வேண்டும்.

**இரகசியமான திக்றின் இரண்டாவது முறை நப்யு, இத்பாத்து-மறுப்பதும், தரிபடுத்துவது.**

இதற்கு பாஸு அன்பாஸ்- சுவாசத்தினிடம் என்றும் சொல்வார்கள். மனிதனுக்கு அவசியம் ஒவ்வொரு சுவாசமும் அல்லாஹ்வின் ஞாபகத்திலேயே போக வேண்டும். மறந்துவிடக் கூடாது. சுவாசம் வெளியில் போகும்போது அதனோடு மனதில் 'லாஇலாஹ' என்று சொல்லவும், பராசியமான 'நப்யு இத்பாத்'துடைய திக்றில் செய்தது போல்.

இந்த திக்றிலேயும் 'லாஇலாஹ' என்பதில் அல்லாஹ் அல்லாத்ததை இல்லை என்று மறுக்க வேண்டும். சுவாசம் உள்ளே போகும்போது, அதோடு 'இல்லல்லாஹ்' என்று சேர்க்க வேண்டும். இன்னும், இல்லல்லாஹ் என்பதில் அல்லாஹுத்தஆலா மவ்ஜூதாக-உள்ளவனாக இருக்கிறதை தரிபடுத்த வேண்டும். அதாவது, 'லாஇலாஹ' ஒரு வஸ்துவும் மவ்ஜூதாக உள்ளதாக இல்லை. 'இல்லல்லாஹ்' அல்லாஹ்வே மவுஜூதாக-உள்ளவனாக இருக்கும்.

தாலிபின் பேரில் திக்று கபி-இரகசியமான திக்றின் குணபாடுகள் வெளியாகுமானால் பின்னால் முறாக்கபாவை படித்துக் கொடுக்க வேண்டும்.

முறாக்கபா என்பதாகிறது ஏதாவது ஒரு குர்ஆன் ஆயத்தின், கருத்தின் சூறத்தை சிந்தனையில் எடுத்துக் கொண்டு அந்த சூறத்தை மனதில் உண்டாக்கிக் கொள்வதற்காக முயற்சி செய்வதாகும். அந்த நேரத்தில் தன்னுடைய ஐம்புலன்களையும் கற்பனை, சிந்தனை, புத்தியையும் அதே கருத்தை தரிபடுத்திக் கொள்வதின் பேரிலேயே திருப்பிக் கொள்வதாகும். மேலும், அந்த கருத்து மனதில் உண்டாகக் கூடிய விதத்தில் அதில் மூழ்கிப் போகிறதையும் உண்டாக்கிக் கொள்வதாகும். இன்னும் முறாக்கபா செய்கிறவன் அந்த கருத்திலேயே மூழ்கிவிட வேண்டும். அழிந்து விட வேண்டும். உவமையில்:

كُلُّ مَنْ عَلَيْهَا فَانٍ وَيَبْقَىٰ وَجْهُ رَبِّكَ ذُو الْجَلَالِ وَالْإِكْرَامِ

'குல்லுமன் அலைஹா பானின் வயப்காவஜ்ஹு றப்பிக துல்ஜலாலி வல் இக்றாமி'-அதில் இருக்கிறவர்கள் அடங்கலும் அழிந்து போகிறவர்களாகும். அதிகாரத்தையும் சங்கையையும்

உடைய உம்முடைய போஷகனுடைய வஜ்ஹு தரிபாடாக இருக்கும்' (55:26,27) என்ற ஆயத்தில் கருத்தான 'அழிந்து போகிற என்ற கருத்தை மனதில் தரிபடுத்துவதற்காக தன்னை இறந்தவனாகவும், இன்னும் பூமியும், வானமும் அழிந்து விட்டதாகவும் நினைப்பதுபோல் கியாமத்து நாள் உண்டாகிவிட்டது. தானும் சகல உலகமும் அழிந்து விட்டது என்றும் மனதில் சூறத்து படுத்திக் கொண்;டு கற்பனை கெட்டியாகி எதார்த்தமாக ஆகிவிடுவதற்காக அந்த கற்பனையிலேயே மூழ்குவதைப் போல். இன்னும் எதார்த்தத்திலேயே தானம் இல்லாமலாகி பூமியும், வானமும் இல்லாமலாகி விட வேண்டும். தானம் அழியவேண்டும். பூமியும், வானமும் மற்றவைகளும் அழிந்து போக வேண்டும். தானும் அழிந்து விட்டான், பூமியும் அழிந்து விட்டது, வானம் துண்டு துண்டாகிவிட்டது. ஹக்குதஆலாவின் தாத்தை தவிர வேறொன்றும் மிஞ்சவில்லை என்பது போலாக வேண்டும்.

இந்த முறாக்கபாவின் பலாபலனாகிறது: இந்த முறாகபா செய்கிறவன் தன்னை எப்போதும் அழிந்தவனாகவும், இல்லாதவனாகவும் பெற்றுக் கொள்வான். மேலும் தன்னோடு சகல சிருஷ;டிகளையும் அழிந்ததாகவும், ஹக்குத்தஆலாவின் தாத்தை ஒவ்வொரு கணமும் தரிபாடானதாகவும் பார்ப்பான். அல்லது 'வஹுவ மஅகும்'-அவன் உங்களோடேயே இருக்கிறான்' என்ற ஆயத்தைப் பற்றிய முறாக்கபாவில் ஒவ்வொரு வஸ்துவினுடனும் ஹக்குத்தஆலா ஒன்றாகவே இருப்பதை முஷhஹதாவாக காட்சியாகிறதற்காக, அல்லது,

وَنَحْنُ اَقْرَبُ اِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيْدِ

(வநஹ்னு அக்றபு இலைஹி மின் ஹப்லில் வரீதி)

'நாம் அவனளவில் பிடரி நரம்பைவிடவும் மிக்க சமீபமாக இருக்கிறோம்' என்பதனுடைய முறாக்கபாவை ஹக்குத்தஆலாவை ஒவ்வொரு வஸ்துவின் உயிரைவிடவும் சமீபமானவனாக காட்சியாகப் பெற்றுக் கொள்கிறவிதமாக முறாக்கபா செய்கிறதுபோல். இந்த எல்லா இரகசியமான திக்றுகளும், முறாக்கபாக்களும் காதிரி;ய்யா தரீகிலும், ஜிஷ்திய்யா தரீகிலும் ஒரேவிதமாகவே ஆகும். ஆனால், இதைவிடவும் மிகப்பிரயோசனமானதும், நாட்டம் சித்தியாகத் தகுந்த காரணமானதும் தேட்டத்தளவில் விரைவில் சேர்த்து வைக்கும்படியானதும் இந்த காலத்தில் இது ஒன்றையே சொல்லிக் கொடுப்பது போதுமானதும், இன்னும் எல்லா தரீகாக்களினாலும் ஏகோபித்து ஒப்புக் கொள்ளப்பட்டதுமான முறாகபாவாகிறது: அல்லாஹுத்தஆலாவின் மஹ்ளுதாத்தை- தாத்தை மட்:டும் ஒரு இஸ்மும், சிபத்துமில்லாமல் தன்னுடைய ஐம்புலன்களின் கவனத்தை திருப்புவதோடு இருதயத்தில் அமைத்துக் கொள்ள வேண்டும். அதாவது ஸிபத்தும், இஸ்மும் இல்லாமல் தாத்தை மட்டும் அமைத்துக் கொள்வதாகும். ஆனால் இப்படி சூறத்து படுத்திக் கொள்வது எல்லோர்களாலும் சாத்தியமாகக் கூடியதாக இல்லை. ஆனதனால் ஷெய்குமார்கள் இப்படி சொல்லிக் கொடுப்பார்கள்.

அதாவது, முறாகபா செய்கிறவன் தன்னுடைய கல்பில் அல்லாஹுதஆலாவின் தாத்தை ஒரு பரந்த ஒளனியான சமுத்திரத்தின் சூறத்தில் தியானிக்க வேண்டும். இன்னும், இப்படி

தியானிக்கும்போது தன்னையும் சகல உலகத்தையம் இந்த ஒளியான சமுத்திரத்தில் அழிந்து-இல்லாமல் போனதாக கருத வேண்டும். இன்னும் இந்த ஒளியான சமுத்திரம் சர்வ உலகத்திலும் இன்னும் ஒன்றுமில்லா வெட்ட வெளிகளிலும் நிரம்பி இருப்பதாகவும், அதாவது எங்குவரையிலும் பார்வையின் ஓட்டமும், இன்னும் சிந்தனையின் ஓட்டமும் இருக்கிறதோ அவை அடங்கலும் சமுத்திரமே சமுத்திரமாக இருக்கிறது என்பதாக தியானிக்க வேண்டும். மேலும் இப்படி கற்பிதமாக உள்ளது, எதார்த்தமாக ஆகிப்போகிற அளவுக்கு இந்த தியானத்தில் மூழ்கிவிட வேண்டும். இன்னும், அல்லாஹுத்தஆலாவின் ஒளியான சமுத்திரம் ஆதிஅந்தமில்லாமல் பரந்து போக வேண்டும். இன்னும் அந்த சமுத்திரத்தைத் தவிர வேறு எவ்விதமான நிறமும் கோலமும், உருவமும் இல்லாதுபோக வேண்டும். இங்கு திக்று செய்ய வேண்டிய அவசியமில்லை. கல்புக் கண்ணைக் கொண்டு மட்டும் இந்த சமுத்திரத்தை பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். தானும் அழிந்து போய் ஹக்குதஆலாவின் தாத்து மட்டும் தரிபாடாக இருக்கிறது.

لِمَنِ الْمُلْكُ الْيَوْمَ

'லிமன் முல்குல் யவ்ம்' இன்று இராச்சியம் யாருக்குச் சொந்தம்? எனும் ஓசை பரிசுத்த தாத்திலிருந்து உண்டாகி கொண்டிருக்கிறது போலுமிருக்க வேண்டும். இந்த முறாகபாவில் எப்பொழுது கவனம் செலுத்துவீர்களோ அப்போது முதலாவதாக முழு முயற்சியோடு உங்களை இறந்தவர்களாக ஆக்கிக் கொள்ளுங்கள். இன்னும் உலகத்தையும் இல்லாத்ததாக ஆக்கி கொள்ளுங்கள். இன்னும் ஹக்குத்தஆலாவின் தாத்தின் இந்தக் கரையில்லா சமுத்திரத்தை மனதில் தரிபடுத்திக் கொள்ளுங்கள். அதிலேயே பராக்காகி விடுங்கள். திறந்த கண்ணிலும் கூட எப்பொழுதும் எந்தவிதமான நிறமும், கோலமும் காட்சிக்கு வராமல் இந்த ஒளி சமுத்திரத்தின் காட்சியே மிகையாகிப் போகிறதற்காக.

இந்த முறாகபா எல்லா தரீகாக்களாலும் ஏகோபிக்கப்பட்டதாகும். இன்னும் சகல திக்று முறாக்கபாக்களின் சாராம்சமும் பலனும், பிரயோசனமும் ஆகும். இந்த முறாகபா நிலைபாடாகவும், நேமமாகவும் ஆக வேண்டும். இங்கு தாத்தே தாத்து மட்டும்தான் இஸ்மும், றஸ்மும்-பெயரும், அடையாளமுமில்லை. எப்படி சமுத்திரத்தை அலைகளும், குமிழிகளும், சுழிகளும், துளிகளுமில்லாமல் பார்ப்பதைப் போல். அதாவது கடல் மட்டுமேயாகிறது அதனோடு அலையுமில்லை, குமிழியுமில்லை, சுழியுமில்லை, துளியுமில்லை. அதேபோல் ஹக்குத்தஆலாவின் பரிசுத்த தாத்து மட்டுமே காட்சியாக வேண்டும். இஸ்முமில்லாமல் றஸ்முமில்லாமல் சிபத்துமில்லாமல், மாஹியத்துமில்லாமல் தாத்தே தாத்து மட்டும் ஆக வேண்டும்.

ஆண்டவா! உனது ஹபீபு அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பொருட்டினால் எங்களுக்கு இந்த பாக்கியத்தை தந்தருள்வாயாக! ஆமீன்! ஆமீன்! யாரப்பல் ஆலமீன்.

இந்த முறாக்கபா நக்ஷபந்தியா ஊலாவிலும், அபுல் உலாஇய்யா தரீகாவிலும் மிக அதிகமாக ஒப்புக் கொள்ளப்பட்டதாகும். இன்னம் உயர்த்தியான சகல தரீக்காவும் இந்த முறாக்கபாவில் கூட்டானதாகும். எல்லார்களாலும் உகக்கப்பட்டதுமாகும். சகல முறாக்கபாக்களை விடவும் உயர்த்தியானதுமாகும். இதற்கு 'முறாகபா பஸீத்து' 'சுத்த ஒளியின் முறாகபா' என்று சொல்வார்கள். 'பஸீத்து' என்பதற்கு பொருள் சோமானமில்லாதது, அதாவது இதில் இஸ்மும், சிபத்தும்கூட சேராதது. தாத்துடைய தஜல்லி மட்டுமேயாகும். இன்னும் இதுவே சகல மர்தபாக்களுக்கும் அசலாகும். இன்னும் சகல தரீக்காக்களாலும் விரும்பப்பட்டதும், நாடப்பட்டதுமாகும்.

**நக்ஷபந்தியா ஊலா, தானியாவின் திக்றுகளும், நடைமுறை(ஷுக்லு)களும்**

நக்ஷபந்தியா ஊலா என்பது கொண்டு கருத்தாவது முஜத்திதிய்யாத் தரீகுக்கு முந்தினதுவாகும். நக்ஷபந்திய்யா தானியா என்பது கொண்டு கருத்தாகிறது முஜத்திதிய்யா தரீகாவாக இருக்கும். இந்த தரீகாவில் சில திக்றுகளும், முறாக்கபாக்களும் புதிதாக சேர்த்து இருக்கிறார்கள்.

**நக்ஷபந்திய்யா ஊலாவின் திக்றுகள் நப்யும் இத்பாத்துமான திக்று- லாஇலாஹ இல்லல்லாஹ என்ற திக்று**

**திக்று, நப்யு இத்பாத்து**

ஸாலிக்கு முதலாவது தனது மனதில் உள்பிச்சாட்டைகளையும் அதாவது பகைமை, கோபம், பொறாமை, கபடம் மற்றவைகளையும் இன்னும் வெளிப்பிச்சாட்டைகளையும் அதாவது கடும் பசி, தாகம், வலி, நொம்பலம், சப்தம், ஓசைகளைக் கேட்பது போன்றவைகளையும் அப்புறப்படுத்த வேண்டும்.

கருத்தாவது: மனது ஒருமுகப்படுவதற்கில்லாமல் பங்கம் விளைவிக்கும்படியான அதிக பசி, அதிக தாகம் இல்லாமலும் வயிறு நிரம்பியும் இல்லாமலிருக்க வேண்டும். என்கிலும், நடுநிலையாக இருக்க வேண்டும்.

இன்னும், மவுத்தை (மரணத்தை) ஞாபகப்படுத்திக் கொண்டு, அதை தன் கவனத்தின் முன்னால் நிறுத்தி பின் உதட்டோடு உதட்டை வைத்து வாய் பொத்திக் கொண்டு மூச்சை தொப்புளிடத்தில் அடக்கி, கண்களைப் பொத்திய வண்ணம் 'லா' எனும் பதத்தைத் தொப்புளிலிருந்து மேலே இழுத்து வலது புஜம் வரையிலும் போய் வலது புஜத்தைத் தலையின் பக்கம் அசைத்தவனாக 'இலாஹ' என்று சொல்லவும். இன்னும், சகல உலகத்தையும் வீசி எறிந்து விட்டேன். தொவது சகலமும் அழிந்து விட்டன என்று நினைக்க வேண்டும். பின்னர் இல்லல்லாஹ் என்று பலமாக சக்தியோ:டு கல்பில் அடிக்க வேண்டும். இன்னும் சகலவிதமான சூறத்துகளையும் நிறங்களையும் விட்டும் பரிசுத்தமான அல்லாஹ்வின் தாத்து மட்டும் கல்பில் வெளியாகி இருக்கிறது. இன்னும் அதனுடைய பரந்த ஒளியானது அதாவது நிறம், உருவம் ஒன்றுமில்லாத அந்த வலுப்பமான தாத்தின் ஒளியானது சமுத்திரம் போன்று வெட்டவெளிகளிலெல்லாம் பரந்து இருக்கிறது என்றும் அறிய வேண்டும். இதேவிதமாக,

ஒவ்வொரு மூச்சிலும் முதலாவது ஒருவிடுத்தம், பின்னர் மூன்று விடுத்தத்திலிருந்து படிப்படியாக ஒரு மூச்சில் ஐந்து பின் ஏழு, பின் ஒன்பது, பின் பதினொன்று, பின் பதிமூன்று, பின் பதினைந்து, பின்பதினேழு, பின் பத்தொன்பது, பின் இருபத்தி ஒன்று வரையிலும் போக வேண்டும்.

எப்பொழுது ஒரு மூச்சில் இந்த திக்றை இருத்தி ஒருவிடுத்தம் ஹுளூறுடன் எட்டி விடுவானோ அப்போது அல்லாஹுத்தஆலாவின் வரிசையினால் அல்லாஹ்வின் தாத்தின் தஜல்லி அவன் பேரில் வெளியாகிவிடும். அப்படி ஆகாதிருந்தால் மறுபடியும் திக்றை துவக்கத்திலிருந்து ஆரம்பிக்க வேண்டும். மேலும் இதேபோல் ஒவ்வொரு மூச்சிலும் ஒன்றிலிருந்து இருபத்தி ஒன்று வரையிலும் ஒற்றைவடமாக அதிகப்படுத்திக் கொண்டே போய் கடைசியாக ஒரு மூச்சில் நப்யு, இத்பாத்துடைய திக்றை பூரணமாக இருபத்தி ஒரு விடுத்தம் செய்துவிட்டால் அல்லாஹுத்தஆலாவின் வரிசையினால் ஒன்றுமில்லாது பேறு கெட்டவனாக ஆகமாட்டான்.

**திக்று இத்பாத்து மஹ்ளூ கலப்பற்ற இத்பாத்துடைய திக்று தனித்த இத்பாத்துடைய திக்று- அல்லாஹ் என்ற திக்று.**

அல்லாஹ் எனும் பதத்தை மூச்சை அடக்கிக் கொண்டு ஹக்குத்தஆலாவின் தாத்தை மட்டும் தியானித்துக் கொண்டு தொப்புளிலிருந்து ஆரம்பித்து மூளையின் உச்சி தோல் வரையிலும் கொண்டு போக வேண்டும். இப்படியே மெலுவாக ஒரு மூச்சிவ் நூறு அல்லது இருநூறு அல்லது அதைவிடவும் கூடுதலான விடுத்தம் திக்று செய்ய சக்தி உண்டாகக் கூடிய அளவுக்கு முயற்சி செய்யவும். சில பெரியார்கள் ஒரு மூச்சில் ஆயிரம் விடுத்தம் திக்று செய்யக்கூடிய திறமையை உண்டாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

**முறாகபா பஸீத்து**

கண்ணை மூடிக் கொள்ளவும். கல்பின் பக்கம் கவனத்தை திருப்பவும். இன்னும் சகல சிருஷ;டிகளையும் பார்வையை விட்டும் இன்னும் மனதை விட்டும் எடுத்து விடவும். இன்னும் மூச்சை அடக்கிக் கொண்டு வாயால் திக்று செய்யாமல் ஹக்குத்தஆலாவின் தாத்தின் சூறத்தை மட்டும் தியானிக்கவும். இன்னும் தானும் இல்லாமலாகி உலகத்திலுள்ள உரு சூறத்துங்கூட இல்லாமலாகி ஹக்குத்தஆலாவின் தாத்துடைய சமுத்திரம் துவக்கமும், முடிவுமில்லாத வெட்ட வெளியெல்லாம் நிரம்பியிருக்கிறதாக ஆகிக் கண்ணைப் பொத்தினாலுமோ, அல்'லது திறந்திருந்தாலுமோ, கல்பின் பக்கம் கவனத்தை திருப்பினாலுமோ, திருப்பாமலிருந்தாலுமோ இந்த சமுத்திரம் காட்சியை விட்டும் இன்னும் கல்பை விட்டும் மறைந்து போகாது. அதாவது வெளிப்பார்வை, அகப்பார்வை இரண்டிலும் இந்த சமுத்திரத்தின் தோற்றம் ஒவ்வொரு கணமும் தரிபாடாக நிலைத்திருக்கிற நிலைமைக்கு எட்டுமளவுக்கு முறாக்கபாவில் மூழ்கிவிட வேண்டும்.

ஆண்டவனே! உன்னுடைய ஹபீபு அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பொருட்டினால் எங்களுக்கு இந்தப் பாக்கியத்தை தந்தருள்வாயாக!

**முஜத்திதிய்யா தரீகாவின் திக்றுகள்**

இந்தத் தரீகாவில் ஆறு லதீபாக்களை தெளிவுபடுத்த வேண்டியதாக இருக்கிறது. முதலாவது இஸ்மு தாத்துடைய திக்றைக் கொண்டு செய்வார்கள். இந்த முதலாவது முறாகபாவுக்கு முறாகபா அஹதிய்யத்து என்று சொல்வார்கள்.

முதலாவது லதீபா கல்பியாக இருக்கும். இடது மார்புக்கு இரண்டு விரலுக்கு கீழ் இருக்கிறது. இந்த லதீபாவின் பக்கம் முழுக்கவனத்தையும் திருப்பி விடுவார்கள். இன்னும் உதடுகளை பொத்தி நாவை மேல் முரசுக்கு மேலால் வைத்துக் கொண்டு கண்களையும் பொத்திக் கொண்டு மனதினால் ஒரு விடுத்தம் 'அல்லாஹ்' என்று சொல்வார்கள். மேலும் ஒவ்வொரு விடுத்தமும் ஹக்குத்தஆலாவின் தாத்தை கல்பில் தரிபடுத்திக் கொள்வார்கள். உலகமடங்கலும் அழிந்துபோய் ஹக்குத்தஆலாவின் தாத்தின் தோற்றம் வெட்ட வெளிபூறாவிலும் நிரம்பி போகிற வரையிலும் இப்படியே ஒவ்வொரு விடுத்தமும் ஹக்குத்தஆலாவின் தாத்தை கல்பில் தரிபடுத்திக் கொண்டே போவார்கள். மேலும் ஒவ்வொரு திக்றிலும் அதாவது ஒவ்வொரு விடுத்தமும் அல்லாஹ் என்று சொல்லும் போதும் ;என் கல்பு அல்லாஹ் என்று ஒவ்வொரு விடுத்தமும் அடிக்கும் போதும் விரிவாகிறது. ஹக்குத்தஆலாவின் தனித்த தாத்துடைய வெளிப்பாடு அபிவிருத்தியாகிக் கொண்டே போகிறது' என்று தியானித்துக் கொண்டு-சூறத்துபடுத்திக் கொண்டிருப்பார்கள்.

திக்று செய்கிறவனும் அழிந்து, திக்றும் அழிந்து இன்னும் உலகமும் அழிந்துபோய் ஹக்குதஆலாவின் தாத்து மட்டும் மிச்சமாக தரிபாடாக இருக்கிறவரையிலும் (இப்படி செய்வார்கள்) அதற்குப் பின்னால் 'லதீபா றூஹி'யிலும் இந்த முறைபோலவே திக்று செய்வார்கள்.

இந்த லதீபாவாகிறது வலது புறத்தில் மார்புக்கு இரண்டு விரல்களுக்குக் கீழ் இருக்கிறது. ஆனால் லதீபா றூஹு மார்புக்குக் கீழ் நேராக இருக்கிறது. லதீபா கல்பாகிறது இடதுபக்கம் மார்புக்கு இரண்டு வரல்களுக்குக் கீழே கொஞ்சம்(இடது பக்கம்) சரிந்து இருக்கிறது.

இப்படிப் போல்




லதீபா றூஹில் ஹக்குத்தஆலாவின் தாத்தின் சமுத்திரம் வெளியாக ஆரம்பித்துவிட்டதானால், லதீபா ஸிர்ரீயின் பக்கம் கவனத்தை திருப்பி விடுவார்கள். இன்னும் அதையம் இதேபோல அல்லாஹ் எனும் திக்றைக் கொண்டும் இன்னும் தனித்த தாத்தை மட்டும் தியானிப்பதைக் கொண்டும் பிரகாசமாக்குவார்கள். இந்த லதீபாவின் ஸ்தானம் முஜத்திதிய்யா, அஹ்ஸனிய்யா

தரீகாவில் இரண்டு மார்புக்குமிடையில், நெஞ்சாங் குழியாக இருக்கும். முஜத்திதிய்யா மஃஸூமிய்யா தரீகாவில் இந்த நெஞ்சின் ஸ்தானம், லதீபா அக்பா உடைய மகாமாக இருக்கும். இன்னும் அக்பாவு(க்கும் கல்புக்கும்) மத்தியில் 'லதீபா ஸிர்ரி'யாக இருக்கும். அக்பாவுக்கும் நூஹுக்கும் மத்தியில் லதீபா கபியாக இருக்கும். இன்னம் நெற்றியின் அடி மூக்குக்கு மேல் லதீபா நப்ஸு அதாவது அனா உடைய மகாமாக இருக்கும். இப்படிப் போல்,

رُوْحُ—خَفِيْ—اَخْفٰى—سِرٌّ—قَلْبُ

கல்பு-ஸிற்று-அக்பா-கபீ-றூஹு நப்ஸு மூக்கின் அடிக்கு மேலாக இருக்கும்.

ஆனால் முஜத்திதிய்யா அஹ்ஸனிய்யா தரீகாவில் நெஞ்சுடைய மகாம் லதீபா ஸிற்றுடைய மகாமாக இருக்கும். நெற்றியுடைய மகாம் லதீபா கபீயுடைய மகாமாக இருக்கும். மூளையின் மேல் தோல் லதீபா அக்பா உடைய மகாமாக இருக்கும். இன்னும் தொப்புளாகிறது லதீபா நப்ஸுடைய மகாமாக இருக்கும். இப்படிப்போல்,

கல்பு இடது மார்புக்கு கீழ், ரூஹு வலது மார்புக்ப கீழ், ஸிர்ரு நெஞ்சு, ரூஹ் நெற்றி அக்பா மூளை, நப்ஸு தொப்புள்-கபீ.

ஆகவே, ஒவ்வொரு லதீபாவிலும் தாத்துடைய இஸ்மான அல்லாஹ் எனும் இஸ்மைக் கொண்டு திக்று செய்து, அல்லாஹ்வின் தாத்தை மட்டும் தியானித்துக் கொண்டு கல்பை பிரகாசமாக ஆக்கியதைப் போல் இவைகளையும் பிரகாசமாக்குவார்கள். இதற்குப் பின்னால் 'லதீபா காலப்' எனும் முழு திரேகத்தையும் 'சுல்தானுல் அத்காரைக் கொண்டு பிரகாசமாக்குவார்கள். அதாவது கண்ணை மூடிக் கொண்டு உதட்டை உதட்டோடு சேர்த்துக் கொண்டு நாக்கை முரசுக்கு மேல்புறமாக வைத்துக் கொண்டு தன்னுடைய பூறா திரேகத்தின் பக்கமும் கவனத்தை திருப்பிக் கொள்வார்கள். இன்னும் என்னுடைய திரேகமும், மேலும் அத்தோடு பூமியும், வானமும், சகல உலகமும் ஆணு அணுவாக ஆகி ஒவ்வொரு அணுவும் அல்லாஹ் என்ற இஸ்மைக் கொண்டு திக்று செய்து கொண்டிருக்கிறது என்று தியானித்துக் கொண்டு, திக்று செய்கிறவன் பூமி, வானத்தினுடைய அணுக்களிலிருந்து அல்லாஹ் அல்லாஹ் என்ற திக்றை கேட்டு மஸ்தாகி முழு உலகத்தினுடைய திக்றும் மதகூறாக-திக்று செய்யப்பட்டவனாக ஆகிப்போகிற வரையிலும் அந்த திக்றில் மூழ்கி விடுவார்கள். பின் திக்ருமிருக்காது, உலகமுமிருக்காது, திக்று செய்கிறவனுமில்லை.

ஹக்குத்தஆலாவின் தாத்தே தாத்தின் தோற்றமாகவே ஆகிவிடும். அதற்குப் பிறகு 'வஹுவமஅகும்' 'அவன் உங்களுடனேயே இருக்கிறான்' அதற்கு பிறகு

وَنَحْنُ اَقْرَبُ اِلَيْهِ مِنْ حَبْلِ الْوَرِيْدِ

நாம் அவனளவில் பிடரி நரம்பை விடவும் அதிக சமீபமாக இருக்கிறோம்' என்ற ஆயத்தின் முறாக்கபா இன்னும் தஜல்லியாத்து அப்ஆலிய்யா, தஜல்லியாத்து ஸிபாத்து துபூத்திய்யா,

தஜல்லியாத்து ஷுவூனாத்து தாத்திய்யா, தஜல்லியாத்து சிபாத்து ஸல்பிய்யா இன்னும் ஹகீகத்து ஜாமிய்யா முஹம்மதிய்யாவின் முறாக்கபாவையும் செய்வார்கள்.

பின்னர், பாத்தின் என்ற இஸ்மின் பக்கம் கவனம் செலுத்துவார்கள். இன்னம் ஹகாயிகுகளை அதாவது ஹகீகத்து க:பா, ஹகீகத்து நுபுவ்வத்து, ஹகீகத்து குர்ஆன், ஹகீகத்து முஹம்மதிய்யா, ஹகீகத்து அஹ்மதிய்யா, ஹகீகத்து உலூமுல் அஸ்மி மற்றவைகளுக்கும் பின்னால், லாத்த அய்யுனு மஹ்ளுடைய-ஒரு குறிப்புமில்லாத கலப்பற்ற தாத்துடைய முறாக்கபா செய்வார்கள். இங்கு முஜத்திதிய்யா தரீகாவின் ஸுலூக்கு-யோக நடை முடிவடைகிறது. ஆனால் இந்த பொடுபோக்கான காலத்தில், இப்படி விபரமான (முறாக்கபா) அளவில் கவனிப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. இதற்காக வேண்டி சகல முறாக்கபாக்களையும் சேகரித்துக் கொண்ட முறாக்கபாவாகிய முறாக்கபா தாத்து முஜற்றதை-தனித்த தாத்துடைய முறாக்கபாவை இக்காலத்திலுள்ள காமிலீன்கள், பெரியார்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றி மேலே பல சூறத்துகளில்-ரூபங்களில் சொல்லப்பட்டிருக்கிறது.

**முறாக்கபா தாத்து முஜற்றது-தாத்தை மட்டும் முறாக்கபா.**

தனித்த தாத்தை மட்டும் முறாக்கபா செய்வதும், முஷாஹதா செய்வதுமாகும். அதாவது ஒவ்வொரு கணமும் திறந்த கண்களோடு சகல வஸ்துக்களின் சூறத்துக்களையும் பார்வையை விட்டும் எடுத்துவிட்டு ஹக்குத்தஆலாவின் தாத்தையே முஷhஹதா செய்வதாகும். பார்ப்பதாகும். பனாபில் அப்ஆல் உண்டாகி, பனாபிஸ்ஸிபாத்து உண்டாகி, பனாபித்தாத்து உண்டாகும் வரையிலும் இதே விதமாக பின்னர் ஸைருபித்தாத்தில்-தாத்தில் யோக நடையிலும் மூழ்கிவிட வேண்டும். மேலும் காலா காலம் வரையிலும் மவுத்துக்குப் பின்னாலும் அபிவிருத்தியாக்கி கொண்டே போக வேண்டும்.

அவனுடைய தாத்து எல்லைக்குள் கட்டுப்படுத்தபட்டதுவல்ல. அவனுடைய தஜல்லியாத்துக்கள் -தோற்றங்கள் சூழ்ந்து கொள்ளப்பட்டதுவல்ல.

'குல்லயௌமின் ஹுவபீ ஷ:னின்' –ஒவ்வொரு நேரமும் அவனுக்கு ஒரு புதிய ஷ:ன்-கருமம் உண்டு. அவனுடைய ஒவ்வொரு ஷ:னும் முந்திய ஷ:னை விடவும் வரிசையானதாகும். ஆகவே ஹக்குத்தஆலாவின் தாத்தை தேடும்படியான இறைவழி நடப்பவனுக்கு ஒவ்வொரு கணமும் யாத்திரையே யாத்திரையாக இருக்கும். தரிபாடு உண்டாகாது. எந்த மகாமிலாவது நின்று விடுவானேயானால் எதார்த்தத்தில் நஷ;டத்திலும், தாழ்விலும் சோதிக்கப்பட்டவானாகவேயாவான். ஒவ்வொரு நேரமும் அபிவிருத்தி செய்து கொள்வது அவனுக்கு அவசியமாகும்.

'பஸ் அல்லாஹ்-பாகீஹவஸ்' போதும அல்லாஹ் மற்றவை வீண் ஆசையாகும்.'

இன்னும், இந்த முறாகபா இந்த முஷாஹதாவானது குறிப்பாக உயர்த்தியான அபுல் உலாயிய்யாத் தரீகாவில் அமலிலிருந்துக் கொண்டிருக்கிறது. இந்த முறாகபா முஷாஹதா

எல்லா தரீகாக்களிலும் ஏகோபிக்கப்பட்டதுவாகும். சகல தரீகாக்களுடைய கடைசியான முறாகபா முஷாஹதாவுமாகும். ஆனால், அபுல் உலாஇய்யாத் தரீகாவில் கல்பைத் தவிர மற்ற லதீபாக்களின் பக்கம் கவனம் செலுத்த மாட்டார்கள். ஏன்? கல்பு சகல லதீபாக்களையும் சேர்த்துக் கொண்டதாகும். ஸிற்று, கபீ, அக்பா, அனா எல்லாமே கல்பின் வட்டத்திற்குள்ளாலேயே அமைந்ததாக இருக்கிறது. கல்பு எதார்த்தத்தில் உலகம் பூறாவுமாகும். உலகத்தின் ஒவ்வொரு சூறத்தும் கல்புடைய சூறத்தே ஆகும். கல்புடைய புள்ளியாகிறது உலகத்தின் ஒவ்வொரு புள்ளிக்கும் ஐனாகவே-தானாகவேயாகும். வானமும் கல்புவாகும். பூமியும் கல்பின் புள்ளியாகும். சந்திரன், சூரியன், புற்பூண்டுகள், கல்கரடுகள், உயிர் பிராணிகள், இன்னும் அவைகளின் பல இனங்களும் வர்க்கங்களும் சகலமும் இதே புள்ளியாகம். ஸாலிக்கு அவசியம் எப்பொழுதாவது ஏதாவது ஒரு வஸ்துவின் பக்கம் கவனம் செலுத்த நாடினால் கல்பின் பக்கமே கவனத்தை திருப்பி கல்பை அந்த வஸ்துவின் சூறத்தில் பார்க்க வேண்டும். உவமையில் சூரியனை பார்க்க நாடினானேயானால் கல்பையே பார்க்க வேண்டும். பூமி, வானம், மற்றவைகளையும் நபி அல்லது ரஸூல் அல்லது ஸர்வரே காயினாத்து அகிலலோகத் தலைவர் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அல்லது அல்லாஹுத்தஆலாவையானாலும் கூட கல்பிலேயே பார்க்க வேண்டும். மேலம் கல்பு தன்னையே பார்க்க வேண்டும். அதாவது கல்பு ஒவ்வொரு சூறத்திலும் வந்து உனக்கு அந்த சூறத்தை காட்சி காட்டுகிறது. ஆகவே, கல்புடைய புள்ளியானது, சகல உலகத்தின் புள்ளிகளுக்கும் ஐனாகவே-தானாகவே யாகும்.

கல்புக்கு சமீபமென்புதுமில்லை. தூரமென்பதுமில்லை. மேலுமில்லை, கீழுமில்லை. சந்திரன் பார்ப்பதற்கு கற்பனையில் மேலே இருக்கிறது. தூரமாக இருக்கிறது. ஆனால் எதார்த்தத்தில் அது கல்பிலேயே இருக்கிறது. ஆனால் கற்பனை கண்ணாடியில் சூரியன் தூரமாகவும் இன்னும் மேலேயும் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. எதார்த்தத்தில் கல்பு தானாகவேயாகும். இன்னம் கல்புடைய ஒரு சூறத்தேயாகும். இதேபோல் ஒவ்வொரு சூறத்தும் அது உயர்வானதை சேர்ந்ததாக இருந்தாலம் சரி, அல்லது தாழ்ந்ததை சேர்ந்ததாக இருந்தாலும் சரி, பிரகாசமானதாகட்டும் அல்லது இருளானதாகட்டும் எல்லாம் பூறாவும் கல்புடைய சூறத்தேயாகும்.

ஸாலிக்குக்கு அவன் எந்த ஒரு வஜ்துவை விட்டுமானாலும் சரி, கல்பை வேறாக பிரிக்க நாடினாலும் முயற்சி செய்தாலுங்கூட அவனால் கல்பை எந்த வஸ்துவையும் விட்டும் பிரிக்க முடியாது என்ற அளவுக்கு இந்த தியத்தில் மலக்கத்-அனுபவம் உண்டாக வேண்டும். மேலும், சகல உலகத்தையும் விட்டும் தேவையற்றவனாகவும் அலட்சியமானவனாகவும் ஆகிவிட வேண்டும். இன்னும் தன்னை தன்னல்லாதவை அளவில் அல்லது தன்னுடைய கல்பு அல்லாதவை அளவில் பிரயாசை செய்தாலுங்கூட தேவையானவனாக பெற்றுக் கொள்ள முடியாது. எப்பொழுதாவது தன்னை தேவையானவனாகப் பெற்றுக் கொண்டால் தன் கல்பளவிலேயே தேவையானவனாக பெற்றுக் கொள்வான். மேலும், சகல உலகத்தையும் தன்னளவிலேயே தேவையானதாக பெற்றுக் கொள்வான். இன்னும் சகலவற்றிற்கும் முகவ்விமாகவும் நிலைக்க வைக்க கூடியதாகவும், ஹாபிளாகவும்-பாதுகாக்கக் கூடியதாகவும்,

ஹாக்கிமாகவும்- அதிகாரியாகவும் பெற்றுக் கொள்வான். இன்னும், சகலத்திலும் கல்பு ஆட்சி அதிகாரம் செய்வதை யகீனாக உறுதியாக ஒவ்வொரு கணமும் பெற்றுக் கொள்வான்.

ஆண்டவனே! நபிமார்கட்கெல்லாம் நாயகமான உனது ஹபீபு அருமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி ஸல்லம் பொருட்டினால் எங்களுக்கு இந்த வலுப்பமான பாக்கியத்தையும் தீட்சையான நி:மத்தையும் கொடுத்தருள்வாயாக! அந்த நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேரிலும், அவர்களின் கிளைஞர்கள், தோழர்கள் பேரிலும் ஸலவாத்தும் ஸலாமும் ஆதியிலிருந்து அந்தம் வரையிலும் உண்டாவதாக. உன்னுடைய கிருபையைக் கொண்டு யா அர்ரஹ்மர்ராஹிமீன்! நம்முடைய பிரார்த்தனையின் இநுதியாகிறது அல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீனாக இருக்கும். சகல புகழும் உலக இரட்சகனான அல்லாஹ்வுக்கே உரித்தாகும்.

*முற்றும்.*

www.sufimanzil.org